Registered as a NewsPaper


விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-07 | 23-09-2004 | வியாழக்கிழமை | ஓசை -218



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். (சி-10163) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# சுமுகமாக நடந்த புலிகள்–படைத்தரப்பு சந்திப்பு

# மாதமிருமுறை சந்தித்துப்பேசவும் இணக்கம்

## ஒக்ரோபர் 6 இல் மீண்டும் கூடிப்பேச முடிவு

**மட்டக்களப்பு விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்காப் படையினருக்கு மிடையே மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற சந்திப்பு சுமுகமான முறையில் நடைபெற்றதுடன் மாதம் இரு முறை இரு தரப்பினரும் சந்தித்துப் பேசுவதென இணக்கம் காணப்பட்டது. அத்துடன் அடுத்த சந்திப்பை ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.**



மட்டக்களப்பில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வழமைபோல் சுமுகமான முறையில் புலிகள் அரசியல் வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு நம்பிக்கை தரக்கூடிய வகையில்

நேற்றைய சந்திப்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக மட்டு- அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்காப் படையினருக்கு மிடையேயான சந்திப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பணிமனையில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது. இச் சந்திப்புக்கு இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜா ஜெனரல் டெண்ரபுறுஹொவ்டே அவர்கள் தலைமை தாங்கினார்.

சிறிலங்காப் படைத்தரப்புக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே எவ்வாறு நட்புறவைப்பேணி வளர்ப்பதென்பது குறித்து ஆராய இடம்பெற்ற இச்சந்திப்பு சுமுகமாகவும், அமைதியாகவும் நடைபெற்றது. மாதமிருமுறை இரு பகுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு–அம்பாறை பா.உகள் கல்விஅமைச்சின் முன்மறியல்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை கல்வி அமைச்சின் முன்பாக மறியற் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர். கல்வியில் முன்னேறிய மாவட்டமாக மட்டக்களப்பைப் பிரகடனப்படுத்தியதனால் பல்கலைக்கழக அனுமதியில் தமது மாவட்ட மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் பின தங்கிய மாவட்டமாக மட்டக்களப்பைப் பிரகடனப்படுத்த வேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## நாகர் கோவில் குண்டுவீச்சில் பலியான மாணவருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

1995 ஆம் ஆண்டு சிறிலங்கா வான் படையினரால் நடத்தப்பட்ட நாகர் கோவில் படுகொலையின் 9 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்.வடமராட்சியில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான விமானங்கள் நாகர் கோவில் மகாவித்தியாலயத்தை இலக்கு வைத்து நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 18 பள்ளிச் சிறார்களும், 10 பொதுமக்களும் அப்பாவித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு சிறிலங்கா வான் படையினரின் குண்டுத் தாக்குதல்களில் பலியானோரின் 9 ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று நண்பகல் 12 மணியளவில் புலோலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நாகர் கோவில் மகா வித்தியாலய அதிபர் சி.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

வடமராட்சி தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ஆதித்தனின் பொதுச்சுடரேற்றலுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடியத்தூதுவர் வலேரி ரேமன்ட் யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

பலாலி இராணுவத் தலைமையகத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ள கனேடியத் தூதுவர் வலேரி றேமன்ட் யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் தென்னக்கோனை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதாகப் பலாலி இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிபொன்றில் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் விமானம் மூலம் பலாலி வந்தடைந்த கனேடியத் தூதுவரின் இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் அரசியல் பொருளாதார விடயங்களிற்கான ஆலோசகர் கிறிஸ்றினா பிறபொன்ரெய்ன் மற்றும் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பான முதுநிலை ஆலோசகர் ஜோய் வில்லியம் ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

கனேடிய உயர் மட்டக்குழுவினரது விஜயம் தொடர்பாக நேற்று யாழ்மாவட்டப் படைகளின் இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் விபரிக்கையில் யாழ். குடாநாட்டில் தற்போ தைய நிலைமைகள் தொடர்பாக யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி கனேடியத் தூதுவருக்கும் அவருடன் வருகை தந்திருந்த குழுவினருக்கும் விளக்கிக் கூறியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27,33)

## மின்னல் தாக்கியதில் இருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

மின்னல் தாக்கி இருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று கிளிநொச்சிப் பகுதியில் பெய்த இடியுடன் கூடிய மழையின் காரணமாகவே இச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விசர்நாய்க் கடிக்கு யுவதி பலி

விசர்நாயினால் கடியுண்ட யுவதி ஒருவர் யாழ்போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி நுணாவில் பகுதியைச் சேர்ந்த சி.அனிஷ்டா (வயது 18) எனும் யுவதியே உயிரிழந்தவராவார்.

ஒரு வாரத்திற்கு முன்பதாக இவரை விசர் நாய் கடித்திருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தொழில் நுட்பக்கல்லூரிக்கு தென்கொரியா 238 மில். நிதி உதவி

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு தகவல் தொழில் நுட்ப வளங்களை ஏற்படுத்தி வழங்குவதற்கென தென் கொரிய அரசு 238 மில்லியன் இலங்கை ரூபாய்களை வழங்கியுள்ளது.

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று வருகை தந்திருந்த இலங்கைக்கான கொரியத்தூதுவர் லிம் ஜே கொங் இதற்கான அறிவிப்பினை உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ளார். கொக்குவில் பகுதியிலுள்ள யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி வளாகத்திற்கு நேரில் விஜயம செய்த அவர் அங்கு இடம் பெற்ற நிகழ்வொன்றில் இம்முடிவை வெளியிட்டார். அவருடன் தென் கொரிய தூதுவராலயத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி கிம் பைங் குவான் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்றும் வருகை தந்திருந்தது.

முன்னதாக விமானமூலம் பலாலி படைத்தளத்தை வந்தடைந்த குழுவினரை வரவேற்று மதிய போசன விருந்தொன்றினை யாழ்.மாவட்ட இராணுவத்தலைமை வழங்கியிருந்தது.

இதன் பின்னர் யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னககோன் உள்ளிட்ட உயர்அதிகாரிகளுடன் குழுவினர் பேச்சுக்களை நடாத்தியிருந்தனர். அதன் பின்னர் இராணுவப் பாதுகாப்புடன் கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.தொழில் நுட்பக்கல்லூரிக்கு விஜயம் செய்த குழுவினர் அங்கு இடம் பெற்ற வரவேற்பு நிகழ்வொன்றிலும் கலந்து கொண்டிருந்தனர். (27,33)

## யுத்தத்தின் போது காணாமற்போனோரின் உயிர்களுக்கு அரசாங்கமே பொறுப்பு

### – உயர் நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

யுத்த சூழ்நிலையில் இராணுவத்தினரால் கைதாகிக் காணாமற் போனவர்களின் உயிர்களுக்கு அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டுமெனக் கொழும்பு உயர் நீதிமன்றம் வழக்கு விசாரணையொன்றின் போது நேற்று அறிவித்துள்ளது

திருகோணமலை லிங்கநகரில் 1994 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுற்றி வளைப்புத் தேடுதலின் போது கைதாகிக் கானாமற் போன கணபதிப்பிள்ளை மகேந்திரராஜா மற்றும் அவரது சகோதரர் கணபதிப்பிள்ளை ஜேசுதாசன் ஆகியோர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர் சிரானி பண்டார நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார் காணாமற் போனவர்களின் தந்தையான எம்.கணபதிப்பிள்ளை இதுதொடர்பாக தாக்கல் செய்துள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

நான் என் மனதிற்கு நேர்மையாகவும், தூய்மையாகவும் தான் எனது பொறுப்பைச்செய்தேன். ஆனால் நான் எனது மக்களுக்கு பணியை முழுமையாக்கவில்லை என்பதையிட்டுப் பெரும் கவலையடைகிறேன்.




தியாகி லெப்.கேணல் திலீபன்


# வண்ண முகில் சோலை

கிளிநொச்சியில்...

இன்று முதல்

## டிஜிடல் வர்ணக்கலையகம்

## திறப்பு விழா



"நவீன டிஜிடல் முறையில் பத்தே நிமிடங்களில் புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை நம்புங்கள்"

### எம்மால் வழங்கப்படும் சேவைகள்

- அதிகூடியளவு "12 X18" டிஜிடல் பதிப்புகள் பத்தே நிமிடங்களில்.
- தூசுப்படிவுகள், கீறல்கள் தன்னியக்கத் திருத்தல் முறையில் ...
- பதிப்பு சேவைகள்.
- தொடர்பாடல் மற்றும் குறியீட்டுப் பதிப்புகள்.
- வாழ்த்து அட்டைகள்/ சட்டமிடற் பதிப்புக்கள்
- நாட்காட்டிகள் மற்றும் படச் சேகரிப்புப் புத்தகப் பதிப்புகள்.

### இதர சேவைகள்...

- படச்சுருள் விருத்தியாக்கல் மற்றும் பதிப்புகள் 20 நிமிடங்களில்.
- பெரிதாக்கற் பதிப்புகள் (3.5X5-12X18)
- கடவுச்சீட்டு/விசா/ கறுப்பு வெள்ளை புகைப்படங்கள்
- 10 நிமிடங்களில்.
- புகைப்படச் சுருள்கள்/ புகைப்படக் கருவிகள்/மின்கலங்கள்
- CD/Floppy படச் சேகரிப்புப் புத்தகங்கள்
- Zip,Digital,Camera Cards,Camera,Phones.
- ஓவியங்கள் சட்டமிடல் வேலைகள்.
- அட்டையிடல் சேவைகள் (Laminating)
- திருமண புகைப்படங்கள் அட்டையிடல்.

### உங்கள் சகல தேவைகளுக்கும்...

- வெளிப்புறப் படப்பிடிப்புக்கள்
- திருமணங்கள்
- பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,நீராட்டு விழாக்கள்,
- கருத்தரங்குகள் மற்றும் ஏனைய விசேட வைபவங்கள் கொண்டாட்டங்கள்.

பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.
தொலைபேசி:077-6052579. (4917)



# மீண்டும் வடக்கிற்கு

## வைரம் மிக்க சீமெந்து

உறுதியான கட்டடம் செய்ய SLS அங்கீகாரம் பெற்ற புத்தளம் கோப்ரேசன் சீமெந்து யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் கிடைக்கின்றது.

கொங்கிரீட் வேலைக்கு – சுப்பிரி சீமெந்து.

கட்டுவேலை, பூச்சுவேலைக்கு – பெதரு சீமெந்து எனக் கேட்டுவாங்குங்கள்.

- இலங்கையில் தொடர்மாடிக் கட்டடங்களுக்கு சிபார்சு செய்யப்பட்டது.
- அரசாங்க பொறியியலாளரின் சிபார்சு பெற்றது.
- வெளிநாட்டு தொழிநுட்பவியலாளரின் உற்பத்தியான புத்தளம் கோப்ரேசன் சீமெந்து
- இலங்கையில் முன்னணியில் திகழ்கின்றது.

(சி-10227)




வடக்கின் ஏகமுகவர்:–
முருகன் களஞ்சியம்,
ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஐ.நா.சபையை முற்றுமுழுதாகச் சீரமைக்க

# பொதுச்செயலரிடம் இந்தியா வலியுறுத்து

-வீட்டோ அதிகாரம் குறித்தும் ஆட்சேபம்

(வோஷிங்டன்)

**ஐ.நா. பாதுகாப்புச்சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்திற்கும் சமவுரிமை இருக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் ஐ.நா.பொதுச்சபைச் செயலர் கொபிஅனானைச் சந்தித்துப் பேசிய மன்மோகன்சிங் இதனை வலியுறுத்தியுள்ளார்.**

இந்தியா, ஜேர்மனி, ஜப்பான், பிறேசில் உள்ளிட்ட நாடுகள் ஐ.நா. சபையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று வலியுறுத்திவரும் நிலையில் கொபி அனானை மன்மோகன்சிங் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஐ.நா.பாதுகாப்புச்சபையில் இடம்பெறும் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் சமவுரிமை இருக்க வேண்டுமென்றும், சுழற்சி முறையில் பாதுகாப்புச்சபை உறுப்பினர் ஆவதையோ அல்லது சமவுரிமை இல்லாத உறுப்பினர் ஆவதையோ இந்தியா உறுதியாக எதிர்ப்பதாகக் கொபிஅனானிடம் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

உலகில் தற்போது நிலவிவரும் உண்மை நிலைகளுக்கு ஏற்ப ஐ.நா.சபையில் அர்த்தமுள்ள சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்றும் இந்தியப்பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சீர்திருத்தங்கள் ஐ.நா. பொதுச்சபை, பாதுகாப்புச்சபை மற்றும் ஐ.நா.அமைப்புக்கள் அனைத்திற்கும் பொருந்துவதாக அமையவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம்சரண், சர்வதேச சமுதாய நலனுக்கு முக்கிய பங்காற்றிவரும் ஐ.நா.சபைக்கு இந்தியா பக்கபலமாக இருக்கும் என்று பிரதமர் ஐ.நா.பொதுச் செயலர் கொபிஅனானிடம் தெரிவித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

ஐ.நா.பாதுகாப்புச்சபையில் ஒரு பிரிவு நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் வழங்கப்பட்டும், ஒருபிரிவுக்கு வீட்டோ அதிகாரம் வழங்கப்படாதும் இருக்கலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டிருப்பது பற்றி வினாவிய போது இந்த யோசனையை இந்தியா முற்றிலும் நிராகரிப்பதாக ஷியாம்சரண் கூறியுள்ளார். இது முறையானது அல்ல. பாதுகாப்புச்சபையில் இடம்பெறும் அனைத்து நாடுகளுக்கும் சமவுரிமை இருக்கவேண்டும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

## சுகர்னோ தோல்வி

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய சனாதிபதித் தேர்தலில் மேகவதி சுகர்னோ புத்திரி தோல்வி அடைந்துவிட்டார். முன்னாள் இராணுவத் தளபதி சுசிலோ பாம்பாங் வெற்றி பெற்றுள்ளார். அதிகார பூர்வ அறிவிப்பு அடுத்த மாதம 5ஆம் திகதி வெளியிடப்படுகிறது.



பாக்தாத்துக்கண்மையில் நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பைப் புகைப்படம் எடுக்கும் ஊடகவியலாளரை அங்கு தேடுதலில் ஈடுபட்ட அமெரிக்கப்படை வீரர் தடுக்க முற்படுகிறார்.

## ஈராக் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 2ஆவது அமெரிக்கரின் தலை துண்டிப்பு!

–இங்கிலாந்து நாட்டவரை மீட்கத் தீவிர முயற்சி

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பிணைக் கைதிகளில் மேலும் ஒரு அமெரிக்கர் தலை துண்டித்துக் கொலை செய்யப்பட்டார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு பாக்தாத்தில் இருந்து 2 அமெரிக்கர்கள் மற்றும் ஒரு இங்கிலாந்து நாட்டவரைத் தீவிர வாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றனர்.

அபுமுசாப் அல் ஜர்காவி தலைமையிலான இந்தத் தீவிரவாதிகள் அமெரிக்கர்களால் சிறைப் பிடிக்கப்பட்ட பெண் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும், இதை ஏற்காவிட்டால் பணயக் கைதிகளைத் தலை துண்டித்துக் கொலை செய்வோம் என்றும் தீவிரவாதிகள் மிரட்டி இருந்தனர்.


இந்தக் கோரிக்கையை ஏற்காததைத் தொடர்ந்து கடத்தப்பட்ட 2 அமெரிக்கர்களில் ஆம்ஸ்ட்ராங் என்ற பொறியியலாளியின் தலையைத் துண்டித்துக் கொலை செய்தனர். அரேபியத் தொலைக்காட்சியிலும் இதைக் கடந்த திங்கள் அன்று தீவிரவாதிகள் ஒளிபரப்பினார்கள்.

மீதி உள்ள 2 பேரையும் விடுவிக்க வேண்டுமானால் 24 மணி நேரத்துக்குள் கோரிக்கையை நிறைவேற்றத் தீவிரவாதிகள் கெடு விதித்து இருந்தனர். இந்தக் கெடு முடிந்ததைத் தொடர்ந்து மேலும் ஒரு அமெரிக்கரின் தலையை நேற்றுத் தீவிரவாதிகள் துண்டித்தனர் அவரது பெயர் ஜாக் ஹெண்ஸ்லே கட்டட ஒப்பந்தகாரரான இவரது தலை துண்டிக்கும் காட்சியைத் தீவிரவாதிகள் தொலைக்காட்சியில் ஒலிபரப்புச் செய்தனர்.


இப்போது இங்கிலாந்து நாட்டைசேர்ந்த பொறியியலாளர் கென்னத் பிங்லே என்பவர் மட்டும் தீவிரவாதிகளின் பிடியில் இருக்கிறார்.

அவரது தலை தப்புமா? அல்லது அவரையும் தீவிரவாதிகள் தலை துண்டித்துக் கொலை செய்வார்களா? என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 2 பெண் விஞ்ஞானிகளில் ஒரு பெண்ணை விடுதலை செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது.



பாக்தாத்தில் விமான நிலைய வீதியில் நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த இராணுவ வண்டியை அவதானிக்கும் அமெரிக்கப் படையினர்.



ஐ.நா. சபையில் நடைபெறும் மாநாட்டுக்கு வருகை தரும் அமெரிக்க சனாதிபதி புஷ்சும் அவரது பாரியாரும்.

## பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற இந்தியா முடிவு!

(வோஷிங்டன்)

பயங்கரவாதத்திற்கு எதிராகவும், பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பெருகுவதைத் தடுக்கவும், இணைந்து செயற்பட இந்தியாவும், அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன.

நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ்சைச் சந்தித்துப் பிரதமர் மன்மோகன்சிங் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். இதன் போதே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறையிலும் இருநாடுகளும் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்த முடிவு செய்துள்ளன.

இந்தியா, பாகிஸ்தான் இடையே நடைபெற்று வரும் இருதரப்புப் பேச்சுக்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ள அமெரிக்க சனாதிபதி புஷ் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்த இந்தியாவின் கவலைகளை உணர்ந்து கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.



இதேவேளை பயங்கரவாதத்தைத் தங்கள் மண்ணிலிருந்து அகற்றுவோம் எனும் பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பின் உறுதிமொழி நிறைவேற்றப்பட்டால் தான், அந்த நாட்டுடனானஇந்தியாவின் பேச்சுவார்த்தை பயனளிக்கும் என்று மன்மோகன்சிங் புஷ்சிடம் வலியுறுத்தியுள்ளார். இருதலைவர்களும் இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## பொருளாதாரத் தடையில் தளர்வு!

லிபியா மீதான பெரும்பாலான பொருளாதாரத் தடைகளை நீக்க அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ் உத்தரவிட்டுள்ளார். இதற்கான ஆணையை அவர் திங்கட்கிழமை பிறப்பித்தார்.குறிப்பாக லிபியாவுடனான விமானப் போக்குவரத்து சேவைகள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டு அந் நாட்டு நேரடி விமானப் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனுடைய பேரழிவு ஆயுதத்திட்டங்கள் குறித்த சர்வதேச சமுதாயத்தின் கவலையைப் புரிந்து கொண்டு அதைப்போக்குவதற்கு கடந்த 9 மாதங்களில் லிபியா எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொருளாதாரத் தடையை நீக்கியுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறைச் செய்தித்தொடர்பாளர் ஆதம் எரேலி தெரிவித்தார்.அதேவேளையில் பயங்கரவாதத்தை அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் லிபியா இன்னும் நீடிக்கிறது என்றும் அவர் கூறினார்.

## அதிருப்தி அதிகரிப்பு

பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியா அரோயா மீது எதிர்ப்பு அலை கிளம்பி வருகிறது. முன்பு சர்வாதிகாரி பெர்டினன்ட் மார்க்கோஸ் கடைப்பிடித்த கொள்கைகளையே இவர் கடைப்பிடித்து வருகிறார் என்றும் பொருளாதாரக் கொள்கைகளால் நாடு சீரழிந்து விட்டது என்றும் குற்றம்சாட்டி மணிலா நகரில் நேற்று ஆயிரக் கணக்கானவர்கள் கண்டனப் பேரணி நடத்தினார்கள்.

–உலகின் தலை சிறந்த–

## 100 இளம் விஞ்ஞானிகளில் ஏழு இந்தியர்களுக்கும் இடம்

உலகின் தலைசிறந்த 100 இளம் விஞ்ஞானிகளின் பட்டியலில் 7 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர். அமெரிக்காவில் உள்ள மாசாசூட்ஸ் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் இந்த ஆண்டுக்கான உலகின் தலைசிறந்த 100 இளம் விஞ்ஞானிகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

விலை குறைந்த மின்னியல் பொருட்களைப் பயன்படுத்தி உலகத்தரம் வாய்ந்த சூப்பர் கணினி உருவாக்கிய ஸ்ரீநிதி நடராஜன் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார். உலகத்தரமுள்ள கணினிகளை உருவாக்க குறைந்தது ரூபா.450 கோடி செலவாகும். ஆனால் ரூபா.225 கோடி செலவில் உலகத் தரமுள்ள கணினியை ஸ்ரீநிதி நடராஜன் மூன்று மாதத்தில் உருவாக்கியுள்ளார். கணினி விஞ்ஞானி அனுஜ் பத்ரா பெரிய கணினித் திரையை உருவாக்கிய ரமேஷ் ரஸ்கார், கணினி விஞ்ஞானி சைதாழி சென்குப்தா, ஆந்திராக்ஸ் சிகிச்சைக்கு மருந்து கண்டுபிடித்த ரவிகேன், சர்க்கரை நோயாளிகளுக்குத் தேவையான விபரங்களை அவ்வப்போது அளிக்கும் மென்பொருளை உருவாக்கிய விக்கிரம் ஷீல் குமார், மாரடைப்பைக் கண்டறியும் கருவியை உருவாக்கிய ஆனந்த் நடராஜன் ஆகியோர் இப்பட்டியலில் இடம்பிடித்த மற்ற இந்தியர்கள் ஆவர்.

# பொதுமகன் ஒருவரின் அன்பளிப்பில் பரந்தன் சந்தியில் பஸ்தரிப்பு நிலையம்

## -காவல்துறை துணைப் பொறுப்பாளர் திறந்து வைப்பு

(கண்டாவளை)

**பரந்தன் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையம் திறப்பு விழா நேற்றுக் காலை 6.30 மணிக்கு கரைச்சிப்பிரதேச ஆணையாளர் திரு.புலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.**

நிகழ்வில் மங்கல விளக்கைத் தமிழீழப் போக்குவரத்துக்கழக உசாவல் பகுதி முகாமையாளர்



பெர்னாண்டோ, கரைச்சிப்பிரதேசசபை முரசுமோட்டை உபஅலுவலக பொறுப்பதிகாரி ஜெகதீஸ்வரன் ஆகியோர் ஏற்றினர். பொதுச்சுடரைப் பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் இன்பவாணன் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியைத் தமிழீழ சீர்திருத்தத்துறைப் பொறுப்பாளர் நரேன் ஏற்றினார்.

தொடர்ந்து திருமதி.இராசதுரை, தங்கச்சியம்மா ஆகியோரின் ஞாபகார்த்த நினைவுக்கல் திரை நீக்கத்தைத் தமிழீழ குற்றப்புலனாய்வுப் பொறுப்பாளர் கானகன் செய்து வைத்தார். பஸ்தரிப்பிட மண்டபத்தைத் தமிழீழக்காவல்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன் நாடாவை வெட்டித்திறந்துவைத்தார்.

தொடர்ந்து சிறப்புரையைத் தமிழீழ காவல் துறைதுணைப் பொறுப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையைக் கரைச்சிப் பிரதேசசபை முரசுமோட்டை உபஅலுவலகப் பொறுப்பதிகாரி ஜெகதீஸ்வரன் நிகழ்த்தினார். பரந்தன் நகர்ப்பகுதியிலிருந்து பல இடங்களுக்கு காத்துநின்று மழை, வெய்யிலுக்கும் ஒதுங்க இடமில்லாமல் பல துன்பங்களை அனுபவித்து வந்த மக்களின் துன்பம் போக்க தருமபுரத்தில் உள்ள R.V பந்தல் சேவை உரிமையாளர் ஆர்.விஜயரட்ணம் அவர்கள் தனது தாய், தந்தையரான திரு.திருமதி. இராசதுரை (சின்னமயில்) தங்கச்சியம்மா ஆகியோரின் ஞாபகார்த்தமாக 37x20 அடி அளவு கொண்ட




(படம்:-செல்வா)

பஸ்தரிப்பு நிலையத்தைச் சுமார்நான்கு இலட்சம் ரூபா செலவில் அன்பளிப்பாகக் கட்டிக் கொடுத்துள்ளார். இந்த பஸ்தரிப்பு நிலையம் திறந்ததையிட்டுப் பிரயாணிகள் பெருமகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (14,செ)

# கரைச்சி பிரதேச சபையால் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினரால் முதற்கட்டமாக கிளிநகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பெற்று வருகின்றமையினைக் காணக்கூடிய


(படம்:-சோதி)

தாகவுள்ளது. கிளிநகரப் பகுதியில் கடந்த 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் மேற்படி நடவடிக்கையின் மூலம் 158 கட்டாக்காலிநாய்கள் பிரதேச சபையினரால் பிடித்தழிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேலும் சில தினங்களுக்கு கிளிநொச்சி நகரமும் அதனை அண்டிய கிராமங்களிலும் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதென கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (சோ)

# தம்பிராய்–கறுக்காய் தீவு வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(பூநகரி)

பூநகரியில் தம்பிராய் சந்தியில் இருந்து வடக்கு நோக்கி செட்டியாகுறிச்சி, கறுக்காய்தீவு கடற்கரை வரையான 3 கிலோ மீற்றர் நீளமான வீதி வலம்புரி இராணுவ நடவடிக்கையில் பாதிப்புற்றுள்ளதால் மக்கள் பிரயாணம் செய்ய முடியாதுள்ளது. தம்பிராய சந்திக்கும் செட்டியாகுறிச்சிக்கும இடையேயுள்ள காஜாமுனங்கு பகுதியில் ஆற்று மண்ணுடன் பல இடங்களில் உழவுஇயந்திரம் புதைந்து பாதிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். எனவே மக்களின் நன்மை கருதி இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (34)

# தியாகி திலீபன் நினைவாக பூநகரியில் உண்ணாவிரதம்

(பூநகரி)

20.09.2004 திங்கட்கிழமை பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்திலும் கறுக்காய்த் தீவு மகா வித்தியாலயத்திலும் தியாகி லெப். கேணல் திலீபன் நினைவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

பூநகரியில் எதிர்வரும் 24.09.2004 அன்று தம்பிராய அண்ணா விளையாட்டுக்கழக பொதுமண்டபத்திலும், பள்ளிக்குடாவில் சுண்ணாவில் அ.த.க பாடசாலையிலும் வாடியடியிலும் 25.09.2004 அன்று முக்கொம்பன் அ.த.க பாடசாலையிலும் பூநகரி வாடியடியிலும் 26.09.2004 அன்று சாமிப்புலம் தியாகதீபம் மருத்துவமனையிலும், பூநகரி வாடியடியிலும் உண்ணா விரதமும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

தியாகி லெப்.கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவாக கடந்த ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் பள்ளிக்குடா விளையாட்டு மைதான புனரமைப்பு சிரமதான வேலை இடம் பெற்றது.

கடல் நீர்-மைதானத்திற்குள் வராதவாறு மண்மூடை கட்டப்பட்டு மறிக்கப்பட்டு பள்ளமான பகுதி மண்ணால் நிரப்பப்பட்டது. இச் சிரமதான வேலையில் கடற்றொழில்ச் சங்கத்தினர் விளையாட்டுக் கழகத்தினர், சனசமூக நிலை அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (34)

# பொது நோக்கு மண்டபம், இரு வீதிகள் புனரமைப்பு பூர்த்தி, மக்களிடம் கையளிப்பு

பூநகரி முக்கொம்பன் கிராமத்தில் ஒரு பொது நோக்கு மண்டபமும் இரண்டு வீதியும் புனரமைக்கப்பட்டு நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி.அரச அதிபரும் பிரதித் திட்டப் பணிப்பாளரும் பிரதேச செய லாளரும் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை பூநகரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த.ஈகைவேந்தன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து பொது நோக்கு மண்டபத்தின் நாடாவினை கிளி.அரச அதிபர் திறந்து வைத்தார். வரவேற்புரையினை மாதர் சங்க செயலாளர் அவர்கள் நிகழ்த்தினார். தலைமை உரையினை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அவர்கள் நிகழ்த்தினார். கருத்துரையினை உள்ளூராட்சி ஆணையாளரும் தொடர்ந்து உதவி ஆணையாளர், பூநகரி உதவி அரச அதிபர் , பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர், பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் வழங்கினர்.

கிளி.அரசாங்க அதிபர் அவர்களும் சிறப்புரை ஆற்றினார். இதனைத் தொடர்ந்து சான்றிதழ் வழங்கப்பட்டது.

மாதர் சங்கத்தலைவி அவர்கள் நன்றி உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சண்முகநாதன் தலைமையில் இடம் பெற்றது.

# "ஒக்ஸ்பாம்" நிதி உதவியுடன் மலசல கூடங்கள் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-கோணாவில் பகுதியில் 'ஒக்ஸ்பாம்' நிதியுதவியுடன் 44மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனுடன் யூனியன் குளம், கோணாவில் காந்திக்கிராமம் பகுதியில் 15 பொதுக்கிணறுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

யூனியன்குளம் பகுதியில் தலா 60000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் 05பொதுக்கிணறுகளும், கோணாவில் பகுதியில் 05 பொதுக்கிணறுகளும், காந்தி கிராமத்தில் 05 பொதுக்கிணறுகளும் ஆகமொத்தத்தில் 15 கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதுடன் கரைச்சிப் பிரதேச சபையால் கோணாவிலில் பொதுச்சந்தை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. (15)

# தட்டுவன் கொட்டியில் மீள் குடியேற்றத்திற்கு இராணுவத்தின் கண்ணிவெடிகள் இடையூறு

## கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவிப்பு


(படம்:-சசி)

(அலுவலகசெய்தியாளர்)

ஆனையிறவு தட்டுவன் கொட்டிப் பகுதியில் மீள் குடியமர்வில் ஈடுபட்டு வரும் மக்களுக்கான வீடுகளை அமைத்துக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அங்கு இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பன இடையூறாகவுள்ளதாக மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தட்டுவன் கொட்டிப்பகுதியில் குடியேறவுள்ள 108 குடும்பங்களுக்கான நீர் விநியோகத்தினை ஆனையிறவு ஊடாக மேற்கொள்வதற்காக அப்பகுதியில் மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவினர் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இதேவேளை தட்டுவன் கொட்டிப் பகுதியிலும் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச.தீ)

# கைப்பற்றப்பட்ட இராணுவ வாகனங்கள் பூநகரி அருங்காட்சியகத்தில்

(பூநகரி)

வலம்புரி இராணுவ நடவடிக்கையினால் சிறிலங்கா இராணுவம் 1991இல் பூநகரியைக் கைப்பற்றியது. இப்பூநகரி இராணுவமுகாமை தவளைத்தாக்குதலின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் பலர் மாவீரரானார்கள். இம் மாவீரரை நினைவுகூரும் முகமாக கைப்பற்றப்பட்ட கனரக வாகனங்கள் பூநகரி வாடியடியில் உள்ள ஒல்லாந்தர் கோட்டைக்கருகில் அமைக்கப்பட்டுவரும் அருங்காட்சி அகத்தில் வைக்கப்படவுள்ளன. (34)

# ஏழை மாணவருக்கு சகமாணவனால் புத்தகப்பை, உபகரணம் அன்பளிப்பு

(பூநகரி)

கடந்த சில தினங்களுக்கு முன்பு பூநகரி மகாவித்தியாலய மாணவரான சரவணதாஸ் என்பவரால் தாய் தந்தையை இழந்த 26 மாணவருக்கு பாடசாலை புத்தகப் பையும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு பாடசாலை முதல்வர் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை மாகாணக்கல்வி அமைப்பின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (34)

## நியாப்திட்ட வேலைகள்

பூநகரியில் செல்லையாதீவு உப்புநீர் அணைக்கட்டு 80% வீதமும் நேர் அடம்பன்குள வேலை 80சதவீதமும் சாமிப்புலம் கரியான் பிட்டி குளம் 70 வீதமும், பல்லவராயன் கட்டுக் குளம் 90% வீதமும் வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முக்கொம்பன் குறை வேலை புனரமைப்பு முடிவுற்றுள்ளது. (34)

# தியாகி திலீபன் நினைவாக...

அகிம்சை மேடை ஏறி
அற்புதம் படைத்திட்ட
அருந்தவப் புதல்வா!
முதல் வணக்கம்.
ஆறிரண்டு தினத்திலே
ஆகாரம் ஏதும் இன்றி
அன்னியர் கரம் எதிர்த்த
சரித்திரப் புயலவனே!
முதல் வணக்கம்
உரிமைப் போரிலே
உறுதி எடுத்தாய்
உள்ளக்கிடக்கையை
உலகிற்கு விதைத்தாய்
காவியம் படைக்க
பல வழி கண்டாய்
தர்மம் காக்க
சபதம் எடுத்தாய்
சத்திய வேள்வியில்
செந்தணலானாய்
திரண்ட மக்களின்
தீயை வளர்த்தாய்
விடுதலை விருட்சம்
கிளையோடு வளர்த்தாய்
இறுதி மூச்சை
இறுகப் பிடித்தாய்
மற்றோர் கற்றிட உடலைக் கொடுத்தாய்
தமிழீழம் ஒன்றே!
முடிவு என்றாய்
திலீபண்ணா!
இறுதிவணக்கம்.

- க.நந்தன்.




# இடைக்கால நிர்வாக திட்டவரைவு தொடர்பாக தென்னிலங்கை ஊடகங்கள் தவறான பிரச்சாரம்

## -குருநாகல் அமைப்புப்பிரதி நிதிகளிடம் யாழ்.அ.சா.அ.தலைவர்

விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக தென்னிலங்கை பெரும்பான்மை ஊடகங்கள் திரிபுபடுத்தப்பட்ட தவறான விளக்கங்களை மக்களுக்கு வழங்கி வருகின்றன. இதனால் தான் தென்னிலங்கை மக்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும், விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகவரைவு தொடர்பாகவும் குழப்பகரமான நிலை தோன்றியுள்ளது. என்று யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசத்திவேல் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகைதந்திருந்த குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த தேவசரண (Devasarana Centre) அமைப்பின் பிரதிநிதிகளிடையே உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட கருத்தினை முன்வைத்தார்.

நல்லூர் கோயில் வீதியில் உள்ள யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைய அலுவலகத்திற்குநேற்றுமுன்தினம் மாலை விஜயம் செய்த 'தேவசரண' அமைப்பின் பிரதிநிதிகள் 49பேர் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினர்.

'தேவசரண' அமைப்பின் பிரதிநிதிகள் குழுவிற்கு திருமதி கீர்த்தி குணதிலக் தலைமை தாங்கினார்.

அங்கு உரையாற்றிய இணையத்தலைவர் வி.ஸ்ரீசத்திவேல் தமது உரையில் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்; "விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் வரைவின் அடிப்படையில் முதலில் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே எமது தரப்பினரது கோரிக்கை.

இதனையே விடுதலைப் புலிகளும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் தென்னிலங்கையில் உள்ள அரசியல் வாதிகள் தமது சுயநல அரசியலிற்காக சமாதான நடவடிக்கைகளை குழப்பியடிக்க முற்படுகின்றனர். அத்துடன் விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக அவர்களும் ஒருபுறம் மக்களிடையே பொய் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ்.மாவட்ட அ;ரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் எந்த விதமானதொரு அரசியல் பின்னணியுமற்றதோர் அமைப்பு இதனைத் தெளிவுபடுத்த விரும்பும், நான்., மீண்டும் ஒரு யுத்தம் வெடித்தால் பாதிக்கப்படப் போவது அனைவருமே என்பதையும்வலியுறுத்துகின்றேன்.' என்றார். மேலும் யாழ்.குடாநாட்டு மக்களது அரசியல் அபிலாசைகள் தொடர்பாகவும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அறிந்து கொள்ளவந்திருக்கும் தாங்கள் உண்மைகளை அறிந்த தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே குடாநாட்டுக்கான இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகைதந்திருந்த குழுவினர் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களையும் முன்னதாக சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர். (27)

## பலதடவை முறையிட்டும் வீதி புனரமைப்பில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள உரும்பிராய்-கோப்பாய் வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது குன்று குழிகள் நிறைந்தவையாகக் காணப்படுகிறது.

நீண்ட காலமாக இவ்வீதி புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுவதால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்து மக்கள் வலிகாமம் கிழக்கில் பிரதேச சபையினரிடம் பலதடவை சுட்டிக் காட்டியும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்துவீதியை புனரமைப்புச் செய்யவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(33)

### ஊழியர் சங்கப் போராட்டத்தின் மத்தியில்

# யாழ்.பல்கலைக்கழகப் பணிகளில் வெளியாரைப் பயன்படுத்த எதிர்ப்பு

பல்கலைக்கழகத்தினது அன்றாடப் பணிகளில் வெளிநபர்களைப் பயன் படுத்துவதன் மூலம் தமது ஊழியர் சங்கப் போராட்டத்தினைச் சில சக்திகள் நசுக்க முற்படுவதாக யாழ்பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினில் வெளியிலிருந்து பணியாளர்களை அழைத்து வந்து கடமையில் ஈடுபடுத்த முற்பட்ட சம்பவம் தொடர்பாகவே இக்கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் காலை வெளியிலிருந்து பணியாளர்கள் சிலரை அழைத்துவந்து அன்றாடச் சேவைகள் சிலவற்றை ஆயுதகுழுவுடன் தொடர்புடைய தரப்புக்கள் சில முற்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.எனினும் இது தொடர்பான தகவல் கிடைக்காததையடுத்து அங்கு திரண்ட நூற்றுக்குமேற்பட்ட ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அங்கு பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த வெளியாட்களையும் அவர்கள் பலாத்காரமாகவெளியேற்றினர். இதேவேளை அடிப்படை அம்சக் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பல்கலைக்கழகங்களின் அன்றாட செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் கல்வி நிலை குறித்து ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் பகுதி வாழ் மாணவர்களின் கல்வி நிலைகள் குறித்த ஆய்வுகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இராணுவ ஆக்கிரமிப்பு அதன் தொடரான இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட வலிகாமம் பகுதி மாணவர்களுக்குத் தேவையான கல்வி வசதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்,பாடசாலைகளை இயல்பாக இயக்க முடியாமைக்குள்ள காரணங்கள் என்பவற்றை மையமாகக் கொண்டே ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இத்தகைய கல்வி ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கல்வி ஆய்வுக் கருத்தமர்வுகளைநடத்திவருகின்றது.. (33)

# விபத்தில் சிக்கி மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படுவோர் குறித்து எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

விபத்துச் சம்பவங்களில் சிக்குண்டதாகக்கூறி யாழ்.போதனா வைத்தியசாலையினில் அனுமதிக்கப்படுவோர் தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்திற்கு யாழ்.நீதவான் இ.த.விக்னராஜா அறிவுறுத்தியுள்ளார்.

அண்மைக்காலங்களில் இவ்வாறு வீதி விபத்தில் சிக்குண்டதாக கூறப்பட்டு வெவ்வேறான சந்தர்ப்பங்களில் பலர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் அவர்கள் எவ்வாறு விபத்திற்குள்ளானார்கள் என்பது தொடர்பாகவோ, சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பாகவோ தகவல்கள் வெளியாவதில்லை.

இதையடுத்தே வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் விபத்திற்குள்ளானவர் தொடர்பாகவும் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்கும் நபர் தொடர்பான பதிவுகளை பேணுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே இதே போன்று வேறு அசம்பாவிதங்களிலும் காயமடைந்துவரும் நபர்கள் தொடர்பிலும் விழிப்பாக இருக்குமாறு பணித்துள்ள நீதவான் தேவையேற்படுமிடத்து பொலிசாரினது உதவியினை நாடுமாறும் பணித்துள்ளார்

அத்துடன் காயமேற்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரியினதோ, அல்லது அவரது உதவியாளர்களினதோ அறிக்கைகளை பெற்றுக் கொள்வது முக்கியமானதெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (25)

# தீருவில் நினைவுத்தூபியில் 12 வேங்கைகள் நினைவு நிகழ்வு

(வடமராட்சி)

குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 மாவீரர்களின் நினைவுநாளான எதிர்வரும் 5 ஆம் திகதி சிறப்பு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

17 ஆம் ஆண்டு நினைவு தினமாக 5ஆம் திகதி வல்வெட்டித்துறை தீருவிலில் உள்ள குமரப்பா, புலேந்திரன் நினைவுத்தூபிப்பகுதியில் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கானஏற்பாடுகளை வடமராட்சி வடக்கு மீனவச்சங்கங்கள் மேற்கொண்டுள்ளன.(27)

# முக்கிய வீதிகளைப் புனரமைக்க அரசஅதிபர் நிதிவழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் உள்ளமுக்கிய வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கென யாழ்.அரச அதிபர் 88 இலட்சம் ரூபாவை வழங்கி யுள்ளார்.இந்நிதிமூலம் வடமராட்சி கிழக்கின் பொற்பதி,குடத்தனை, அம்பன், மணற்காடு, நாகர்கோவில் போன்ற பகுதிகளில் உள்ள முக்கிய மான வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் உள்ள வீதிகள் 20 வருடங்களுக்குமேலாகப் புனரமைக்கப்படாததால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் எதிர்கொள்ளும் அவலங்களைக் கவனத்தில் கொண்டே அரசஅதிபர் இந்நிதியினை யாழ்.மாவட்டத்திற்கான அபிவிருத்தித்திட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளார். (33)

# புலிகளுடன் பேசித் தீர்வுக்கு வருவதே நாடு உருப்படுவதற்கு வழி

தற்போது நாட்டில் பொருட்களின் விலை யேற்றம், எண்ணெய் விலையேற்றத் தினால் வாழ்க்கைச் செலவு என்றுமில் லாதவாறு அதிகரித்துள்ளது. இந் நிலையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அரசு சமர்ப்பிக்கவிருக்கும் வரவு செலவுத்திட்டத்தில் விலை வாசி அதிகரிப்பைக் கட்டுப்படுத் துதல் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தல் போன்ற வைகளை அமுல்படுத்த முடியுமா அல்லது இது ஒரு கண்ணா மூச்சி வரவு-செலவுத்திட்ட மாக இருக்குமா? இதுவே இன்றைய முக்கிய கேள்விகளாக அமைந் துள்ளன.

வரவு -செலவுத்திட்டம் அடுத்த மாதம் 09 ஆம் திகதி பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இதற்கு முன்னதாக வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தற்போது திறைசேரியில் சிரேஷ்ட உத்தி யோகத்தர்கள் வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதில் முழுக்கவனத்தையும் செலுத்தியவண்ணம் உள்ளனர்.

சனாதிபதியும், நிதியமைச்சரும் திறமான ஒரு வரவுசெலவுத் திட்டத்தை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்கு மிக ஆர்வம் கொண்டுள்ளனர். பொதுமக்களின் வாழ்க்கைச்செலவைக் குறைப்பதும் அரச ஊழியர்களுக்கு எழுபது சதவீத சம்பள உயர்வை அதிகரிப்பது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகும். தேசிய பொருளாதாரத்தை உலக வங்கிக்கு ஈடுவைத் திருக்கும் பொறியிலிருந்து அகற்றி பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு வழிவகுப்போம் என்று கூறியவர்கள் இன்று திக்குத தெரியாத காட்டில் அலைவதுபோல் என்னசெய்வதென்று திணறிக்கொண்டுள்ளனர். சம்பள உயர்வு, பொருட்களின்விலைகளைக் குறைத்தல், நிவாரணம் வழங்குதல் போன்ற அரசியல் தீர்மானங்களை முன்வைப்பதில் அரசாங்கம் மக்களின் கவனத்தை தம்வசம் ஈர்த்துகொள்ளும். இது வழமையாக நடைபெறுவதொன்றாகும். எதிர்க்கட்சியில் இருக்கும் அரசாங்கத்தை விமர்சனம் செய்தும், பொய்க்குற்றங்களை முன்வைத்து ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சிநடத்தும் போது தான் அதன்விளைவுகள் தெரியும். மக்களால் வரவேற்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளும் பொழுதுதான் அதன்தாக்கம் புரியும். அதே நிலைக்கு இன்றைய அரசாங்கம் முகம் கொடுத்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்றபின் உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்தது. இதனால் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரித்துள்ளதுடன் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. இதிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமானால் நல்லதொரு வரவுசெலவுத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அடுத்தபிரச்சினை ரூபாவின் பெறுமதி குறைந்து அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பு. இதுவும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு ஒரு காரணமாக அமைந்தது. ஐக்கிய தேசியக் கட்சியினர்கள் திறைசேரியில் இருந்து கொண்டு ரூபாவின் பெறுமதியைக் குறைக்கும் செயல்களில் ஈடுபடுவதால் நாட்டின் பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றதென எதிர்க்கட்சியினர் மேல் குற்றங்களைச் சுமத்துகின்றனர். இவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்யும்பொழுது அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் நித்திரை செய்கின்றார்களா? என்று பொதுமக்கள் அரசாங்கத்தைக் கேட்பதில் எந்தக் குற்றமும் இல்லை. இப்பிரச்சினைகள் யாவும் வெற்றிபெற வேண்டுமானால் வரவு-செலவுத் திட்டத்தில் சிறப்பம்சங்கள் இருப்பது மிக அவசியம்.அதைச் செய்து முடிப்பதில் அரசாங்கம் பெரும்சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிடும். இந்த வரவு-செலவுத்திட்டத்தில் மாற்றங்கள் ஏற்படும்பொழுது பொருளாதாரத்திலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும்.அது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்குமா என்பதில் மிகக் கவனமாக இருக்கவேண்டும். பொருளாதாரம் பாதிக்கப் படுமானால் மீண்டும் பலபிரச்சினைகள் நாட்டில் தோன்றும். இதனால் பொதுமக்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள்.

பொதுமக்களின் அபிப்பிராயங்களை பெற்றுக்கொண்டு வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிக்கப் போகிறோம் என சமீபத்தில் பிரதமர் நாட்டு மக்களுக்கு அறிவித்திருந்தார். நாம் இதை வரவேற்கின்றோம். இதனை நடைமுறைப் படுத்த முடியுமா? என்பது கேள்வியாகும். அனைத்து மக்களினதும் அபிப்பிராயங்களைப் பெற்று வரவு-செலவுத்திட்டத்தை தயாரிக்க முடியாது. வரவு-செலவுத திட்டம் தயாரிக்கும்பொழுது மக்கள் இதில்நன்மை பெறவேண்டும். இதுவே மக்களின் முக்கிய எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்புடன் நாட்டில் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டும். பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் நிதி வேண்டும். ஆனால் நாட்டில் பணநோட்டுக்களை அச்சடித்து அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாது என்பது தெரிந்தவிடயமாகும். அப்படி புதிய நோட்டுக்கள் அச்சடித்து விநியோகம் செய்தால் மேலும்விலைவாசி அதிகரிக்கும். இது ஆட்சிபுரியும் ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் தெரிந்தவிடயமாகும்.

அடுத்த விடயம் என்ன வென்றால் பொதுமக்களுக்கு நன்மைகள் செய்வதற்கு நிதி மிக அவசியம். அந்தநிதியைப் பொது மக்களிடமே பெற்றுக்கொள்ள வேண்டும். இதனைப்பல்வேறு உபாயங்களை முன்வைத்துப் பெறவேண்டும். பொதுமக்களிடம் நிதி வசூலிக்க வேண்டுமானால் அவர்களிடமிருந்து வரி அறவிடுவது மிகஅவசியம். கடந்த வாரங்களாக பெற்றோல் , டீசல் விலைகள் அதிகரித்துள்ளதென பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்தது. இதனால் பொருட்களின் விலையும் போக்குவரத்துக் கட்டணமும் அதிகரித்தது. இவையாவும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்ட விடயமாகும். மக்களிடமிருந்து இவற்றுக்குப் பணம் அறிவிடப்படுகின்றது. அதாவது மக்களுக்குத்தெரியாமல் பொருட்களின் விலைகளை அதிகரித்து அவர்களிடமிருந்து அரசாங்கம் வரியை அறவிடுகிறது. கடைசியில்பார்க்கும் பொழுது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வரியைச் செலுத்துவதில்லை. அந்த வரியை மக்களிடமிருந்து அறவிடுகிறது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நிதியில் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வியமைச்சர்களின் சுகபோக வாழ்வு அவர்களின் போக்கு வரத்துகளுக்குப் பாவிக்கப்படும் கார்கள் யாவும் பொதுமக்களின் வரியில் இருந்து பெறப்பட்டு இவர்கள் சுகபோகங்களை அனுபவிக்கின்றனர். இது மக்களின்வரிச் சுமையை அதிகரித்து அதில் பெறப்படும் நிதியினால் நாம் சுகபோகத்தை அனுபவிக்கின்றோம் என எந்தவொரு அரசியல் வாதியும் அரசியல் தலைவர்களும் நினைப்பதில்லை.இது கடந்த அரசியல் காலத்தில் நடந்தது. அதைத் தற்போதைய அரசாங்கம்வெளிப்படுத்தி வருகின்றது. ஒன்று மிகத் தெளிவாக நமக்குத் தெரிகின்றது அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் அதிகரிப்பு மற்றது மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் இவை யாவும் பொதுமக்களிடத்தில் பெற வேண்டும். அதற்கான வழி செலவந்தர்களிடமிருந்து வரி அறவிடுதல். இது ஒரு காலத்தில் சிறப்பாக இந்த நாட்டில் நடந்தது. செல்வந்தர்களே இந்த நாட்டில் தொழிற்சாலைகள், போக்குவரத்துக்கள், ஏனைய வணிகத்துறைகளை நடத்திவருகின்றனர். தொழிற்சாலைகளுக்கும், வணிகத்துறைகளுக்கும் போக்குவரத்துக்கு வரி அதிகமாக அறவிடும்போது அவர்கள் தாங்கள் தயாரிக்கும் பொருட்களின் விலைகளை அதிகரிக்கின்றனர். இந்தப் பொருட்கள் யாவற்றையும் பொதுமக்கள் கொள்வனவு செய்கின்றனர். அப்போது அவர்கள் வாங்கும் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கின்றது. இதன் மூலம் பொதுமக்களிடமிருந்து வரியை அரசாங்கம் வசூலிக்கின்றது. கடந்த அரசு சிகரெட்,மதுபான வரியை அதிகரித்தது. இது மக்களிடமிருந்து இலகுவான முறையில் வரியை வசூலிக்கும் ஒரு தந்திரமாகும். இந்தமுறையால் நாட்டில் சட்டவிரோத மது பானங்களின் உற்பத்திகள் அதிகரித்தன. இதனால் நாட்டில் பெரும் குற்றச் செயல்கள் அதிகரித்தன. தற்போதைய அரசாங்கம் வரிகளைக குறைத்து அபிவிருத்தியை அதிகரிக்க வேண்டும். அபிவிருத்தி அதிகரிக்கும் பொழுது பொருளாதாரம் அதிகரிக்கும். பொருளாதாரம் அதிகரிக்கும் பொழுது நாட்டில் விலைவாசி குறையும். நாட்டில் விலைவாசி குறையும் பொழுது மக்களிடமிருந்து அறவிடும் வரிகளும் குறையும். மக்களின் நலன்களை அதிகரிப்பதற்கு நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வது மிக அவசியம். இதற்கு விவசாயத் தொழிலாளி,கடற்றொழிலாளர் இவர்களை இணைத்துக்கொள்வது மிகஅவசியம்.ஆனால் இதைத்தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகளுக்கு நடைமுறைப்படுத்த முடியும். உதாரணமாக ஒன்று கூறமுடியும். சோவியத் நாட்டின் பொல் சோவியர்கள் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் பொழுது நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நிலையில் இருநததது. இதைக் கட்டியெழுப்புவதற்கு பியோ பொனார்ஸ்கி நாட்டில் உள்ள கமக்கார தொழிலாள வர்க்கத்தை இணைத்துக்கொண்டார். அவர்களின் கடின உழைப்பும் கடும் முயற்சியும் ரஷ்ய நாட்டைப் பொருளாதாரத்தில் கட்டியெழுப்பியது. பிறகு யோசப் ஸ்டாலின் மேலும்தொழிலாளர் விவசாய வர்க்கத்தை இணைத்துக்கொண்டு ரஷ்சியாவை பொருளாதாரத்தில் கட்டியெழுப்பினார். இவையாவும் கடந்தகால சரித்திரங்கள். சோவியத் நாட்டில் உற்பத்தி யாகும் சகல பொருட்களையும் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்வனவு செய்தது. இதனால் முதலாளிகளின் சுரண்டல்களுக்கு அங்கே இடமில்லாமல் போயிற்று. அந்த நாட்டில் ஆயுத உற்பத்திகளுக்கும் உலக நாடுகளின் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களுக்கும் உலகம் முழுவதிலும் உள்ள விடுதலை இயக்கங்களுக்கும் சோவியத் யூனியன் உதவி செய்தது.

> **"பொதுமக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொண்டு வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிக்கப் போகிறோம் என சமீபத்தில் பிரதமர் நாட்டு மக்களுக்கு அறி வித்திருந்தார்.ஆனால் இதனை நடை முறைப் படுத்த முடியுமா? என்பது கேள்வியாகும்."**

இதைத் தற்போதைய கூட்டு அரசாங்கத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டுவருகிறோம்.

எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்குச் செய்யக்கூடிய நன்மைகள் மக்களிடமிருந்து எப்படி நிதியைப் பெற்றுக்கொள்வது. முடிந்த அளவு செல்வந்தர்களிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதைத் தற்போதைய அரசு ஒரு சவாலாக ஏற்று நடைமுறைப் படுத்த வேண்டும். அத்துடன் மக்களிடம் பெறப்படும் நிதியை மிக அவதானமாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த வேண்டும். அரச கூட்டுத்தாபனங்களின் வீண் செலவுகளைக்கட்டுப்படுத்த வேண்டும். இதனால் நாட்டின் பொருளாதாரம் முன்னேறும். சுரண்டல்களுக்கு இடமிருக்காது பொது மக்களிடமிருந்து பெறும் நிதியை பாதுகாக்க வேண்டுமானால் யுத்தச் செலவைக் கட்டுப்படுத்த வேண்டும்..நாட்டில் இனி ஒரு யுத்தம் நடைபெறாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

**லங்கதீப சிங்கள நாளிதழ்**
**டி.கே.அமரதுங்க**
**மொழியாக்கம். அ.சக்திவேல்**

மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து டோக்கியோ நிதி 45,000 கோடி அமெரிக்க டொலர்களைப் பெற்றுக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்குச் செலவிட வேண்டும். எனவே சனாதிபதி அவர்கள் மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை செய்யவேண்டுமானால் தைரியமாக முன்வந்து மீண்டும் சமாதான முயற்சியை முன்னெடுத்துச்செல்ல வேண்டும். புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து நாட்டை நல்ல வழிக்குக் கொண்டுவந்தால் நாடு உருப்படும், மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள்.



# "உலகளாவிய ரீதியில் ஆசிரியர் கல்வி (பயிற்சி) நிகழ்ச்சித் திட்டங்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ள புதிய போக்குகள்"

"ஆசிரியர் கல்வி என்பது கற்பித்தலுக்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் அதனைப் பயிற்சி செய்வதற்காக ஆயத்தப்படுத்தும் ஒரு வழி வகையாகும்." ஆசிரியர் கல்வி ஆசிரியர்களின் செயற்பங்கை வினைத்திறனுடன் செய்வதற்கு அவருக்கு உதவுகிறது. மேலும் பொருத்தமான அறிவு நுட்பங்கள் நடத்தைகள் என்பவற்றை விருத்தி செய்வதற்கு உதவுகிறது. தற்கால நவீன உலகில் வீட்டுச் சூழல் தாய் தந்தையரின் அரவணைப்பு குறைந்த பிள்ளைகளின் வளர்ச்சி மேலும் ஆசிரியர்களின் பொறுப்பை அதிகரித்துச் செல்கிறது.

இந்த அடிப்படையில் ஆசிரியர்களின் பொறுப்பு அறநெறிப் பாங்குடன் தொடர்புடையதாகவும் ஒழுக்க நெறியுடன் தொடர் புடைய முறைகளின் கூறுகளை ஒருங்கிணைத்துப் பெறும் ஒன்று சேர் முறையிலும் இன்று நாட்டம் வளர்ந்து வருகிறது.

முக்கியமாக காணப்படும் மற்றுமோர் உலகளாவிய போக்குயாதெனில், எல்லா ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் எதிர்கொள்ள வேண்டிய நம்பிக்கை தராதரத்தை (Accreditation standards) அறிமுகப்படுத்துவதற்கு செய்யும் முயற்சியாகும். இது ஆசிரியர் தரத்தை உயர்த்துவதில் முக்கியத்துவம் பெறுகிறது. தவிரவும் பல்கட்ட தராதர பத்திரத்தை (Multistage certification) அறிமுகப்படுத்தவும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இவ் ஏற்பாட்டின் மூலம் ஒரு ஆசிரியரின் வேலையானது. ஒழுங்காக மறுபரிசீலனை செய்யப்படுவதற்கும் ஆசிரியர்கள் தமது தொழிலில் வாண்மைத்

*ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தை மீள வடிவமைத்தல்.

*சிறந்தவர்களை இத் தொழிலுக்கு தெரிவதற்கான உயர் ஊதியம் வழங்கல்.

* கலைத்திட்டத்தில் மாற்றங்கள் செய்தல். எண்ணக்கருக்கள், அறிவாற்றல் சார்ந்த திசைமுகப்படுத்தலை கூடியளவு தொழில்நுட்பத் தொழில்சார்ந்த திசைமுகப்படுத்தலாக மாற்றல்.

*முகாமைத்துவ நுட்பங்களுக்கு அழுத்தம்கொடுத்தல்.

* நுண்ணியகற்பித்தல், போலக்கற்பித்தல், நுட்பங்கள், மீள் சிந்தனை, சொற்களற்ற தொடர்பாடல், தொழில்நுட்பபயன்பாடு போன்ற நவீனபயிற்சி முறைகளைப் பயன்படுத்துதல்.

மேற்கூறப்பட்ட அம்சங்களை சுற்றறிக்கையின் படி ஆசிரியர் கல்வியின் ஆரம்ப நிலையில் பாடசாலைகள் கூடுதலானஅளவு பங்கேற்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும் நிதியானது உயர்கல்வி நிறுவனத்தில் இருந்து பாடசாலைகட்கு மாற்றப்பட வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இவற்றின் மூலம் நாம் காணும் முக்கியபோக்குயாதெனில் இங்கிலாந்தின் ஆசிரியர் கல்வியானது உயர்கல்வி நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் இடையிலான ஒன்றிணைப்பாக ஒரு பங்கீட்டு மாதிரியை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதாகும். தவிர பெரும்பாலானவை ஆசிரியர் கல்வியின்தரத்தைப் பேணுவதில் அதிக கவனம் செலுத்துவதையும், வெவ்வேறு மட்டங்களுக்கு வெவ்வேறு வகை நிகழ்ச்சித்திட்டங்கள் இருப்பதையும் காணமுடிகிறது.

கின்றது.

இதுவரையும் கூறப்பட்ட உலகளாவிய ரீதியில் ஆசிரியர் கல்வியின்புதிய போக்கிலே சில பொது அம்சங்களை நாம் இனங்காணலாம். அது தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களுக்கான கேள்வி அதிகரிப்பதே ஆகும். இந்த அடிப்படையில் பின்வரும் அம்சங்களை நாம் அவதானிக்கலாம். ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட முற்படுவதனை அவதானிக்கலாம். இக் கூட்டு முயற்சி மூலமே ஆசிரியர் கல்வியின் பெறுபேறு வலுப் பெறுவதாகக் கருதப்படுகிறது.

ஆசிரியர் ஒரு ஆய்வாளர் எனும் போக்கு மாறுபட்ட கலாசார சூழ்நிலையில்மாணவ ஆசிரியர்தாகவும் மிளிர வேண்டிய தேவைப்பாடும் ஆசிரியருக்குண்டு இந்த வகையில் ஆசிரியர் கல்வி என்பது ஆசிரியர் பயிற்சி என்பதிலிருந்தும் வேறுபட்டு பரந்த விடயப்பரப்பை உள்ளடக்கிய சிறப்பான துறையாக பரிணமித்துள்ளது எனலாம்.

உலகளாவிய ரீதியில் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டம் முக்கியத்துவம் உணரப்பட்ட தொன்றாகும். ஆசிரியர் கல்வியானது ஆரம்பப்பயிற்சி தொடக்கம் தொழிலில் நுழைந்த காலம் தொட்டு தொழில் செய்யும் காலம் முழுவதும் தொடர்ச்சியான சேவைக் காலப் பயிற்சியாக நீடிக்கும் ஒருங்கிணைந்த செயன்முறையாகக் காணப்படுகின்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பாரம்பரிய நிறுவனப் பயிற்சியுடன் மாற்று மாதிரிகளையும் ஆசிரியர் கல்வியில் புகுத்துவதற்கு முனைந்துள்ளன. பாடசாலை சார்ந்த பயிற்சி போன்ற மாதிரிகளிலும் வேறு பயிற்சி தேர்ச்சியை நவீனஉலகின் போக்கிற்கேற்ப இயைபாக்கம் பெறவும் வழிவகுக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

பொதுவாக ஆசிரியர் கல்வியின் தரத்தை உயர்த்தும் முயற்சியில் அபிவிருத்தியடைந்த, அடைந்துவரும் நாடுகள் ஆசிரியர் கல்விநிகழ்ச்சித்திட்டத்தை மீளமைப்பதற்காக பல்வேறு கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்து செயற்படுத்துகின்றன. இந்த அடிப்படையில் ஆசிரியர் கல்வியின் உலகளாவிய புதிய போக்குகள் பின்வரும் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு விளங்குகின்றது.

* ஆசிரியர் தொழில் வாண்மை அனுமதிக்கான தராதரத்தை உயர்த்தல்.

*தொழில்அனுபவப் பயிற்சிக்கும் தொடரும் கல்விக்கும் சந்தர்ப்பம் வழங்குவதுடன் களப் பயிற்சிக்கு மேலும் அழுத்தம் கொடுத்தல்.

அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகள் பலவும் ஆசிரியர் கல்வியை விருத்தி செய்வதற்கு புதிய திசைமுகப்படுத்தல்களை ஏற்றுக்கொண்டுள்ளன. உதாரணமாக இங்கிலாந்தில் ஆசிரியர் பயிலுனர்கள் தமது பாடநெறியைப் பொருத்தமானதாக்குவதற்கு பாடசாலைக்குச் சென்று கற்பித்தலை மேற்கொள்கின்றனர். மேலும் பயிற்சி பெற்ற அனுமதி பெற்ற ஆசிரியர்களை உருவாக்குவதல் முதலிய விடயங்களில் "கேட்" (Cate) அமைப்பு சிறப்பாக செயலாற்றுகின்றது. ஆசிரியர்கள் நிகழ்காலத்திற்கு தகுதியானவர்களாக வேண்டும் என்றும் இதனை அனுபவத்தின் மூலம் மட்டுமே அவர்கள் பெறமுடியும் எனக் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றது. தவிர பாடசாலை சார்ந்த பயிற்சியானது வெறும் அளவு ரீதியானதாக மட்டும் அமையாது திட்டமிடுதல், பயிற்சி வழங்குதல் என்பவற்றில் ஆசிரியரின் பங்குபற்றுதலின் தன்மை, உயர் கல்விக்கும் பாடசாலைக்கும் இடையிலான கூட்டுறவின் தன்மை என்பவற்றினையும் உள்ளடக்கப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றது.

மேலும் 9/92 (DES 1992) ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளிலும் கற்றல் உள்ளடக்கத்திற்கும் சிகிச்சை நிலைய அனுபவத்திற்கும் அதிக அழுத்தம் வழங்கப்படுகின்றது. மேலும் ஆசிரியர் பயிற்சி அனுபவத்தில் பாடசாலைகளைப் பங்குபற்றச் செய்தலும் ஐக்கிய அமெரிக்க, பிரித்தானிய நாடுகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஐக்கிய தன்சானிய குடியரசின் போக்கை நாம் பார்ப்போமாயின் ஆசிரியர்வளமையங்கள் (Teacher research centres-TRC) மூலம் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் சேவைக்காலப் பயிற்சி புதிய சக்தியைப் பெற்றுள்ளன எனலாம். பொதுவாக அராபியநாடுகளின் ஆசிரியர் கல்வியானது ஆரம்பநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதை நோக்காக் கொண்டுள்ளது.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் சேவைக்காலப் பயிற்சிக்கு அதிமுக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. பாகிஸ்தானில் முன்சேவை, சேவைக் காலப் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகளுக்கு அனுபவங்களை வழங்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாகத் தகுதியுள்ள ஆசிரியர்களை உருவாக்கும் முகமாக ஆசிரியர் கல்வி கலைத்திட்டங்களிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு

**ஆக்கம்,**
**திரு.ந.செந்தில்வடிவேல்.**

வருகின்றன. பாரம்பரிய கல்வி கலைத்திட்டத்தில் கற்பிக்கப்படாத பிரச்சினைவிடுவித்தல், தொடர்பாடல் திறன், தலைமைத்துவம் போன்ற நடத்தை நுட்பங்களையும், ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளனர். (கார்னவேல், 1994) வாழ்நாள் முழுவதும் கற்பவராக ஆசிரியர் திகழவேண்டும் எனும் கருத்து உலகளாவியரீதியில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மாறும்உலகிற்கேற்பதம்மை இயைபாக்கம் செய்துகொள்வதும், தகவல் தொழில்நுட்பயுகத்திற்கு ஈடு கொடுக்கும் விதத்தில் ஆசிரியர்கள் தரம் உயர்நிலையில் பேணப் படுவதும் தற்கால உலகில் இன்றியமையாத தேவைப்பாடாக உள்ளது எனலாம்.

* * * *

## ஐ.ம.சு முன்னணி அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு உதவியுடனான அபிவிருத்திக்கு முன்னுரிமை

### -திறைசேரியின் செயலர் டி.ஜெயசுந்தர

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக திறைசேரியின் செயலர் டி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் வெளிநாட்டு உதவிகள் மூலமான 800 முதல் 850 மில்லியன்கள் வரையிலான நிதி உள்ளடக்கப்படவுள்ளது.

அத்துடன் பொதுமக்களிடம் இருந்து முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் மொத்ததேசிய உற்பத்தி வளர்ச்சி வீதத்தை 6.5 வீதத்தில் இருந்து 7 முதல் 7.5 வீதமாக உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

புதிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உயர்ந்த வரி வருமானத்துக்கு வழியேற்படுத்தப் படவுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெரும்பாலும் வெளிநாட்டு உதவிகளே பயன்படுத்தவுள்ளன.

இது ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குஅதிகமான தொகையாகும் என ஜெயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசாங்க ஊழியர்களுக்கு திருப்திப்படக் கூடிய அளவில் வேதன உயர்வு வழங்கப்படுவதற்கு புதிய வரவு செலவுத் திட்டத்தில் முழுக்கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதியே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொரடா, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதம் தொடர்ந்து 18 நாட்கள் நடைபெறவுள்ளது மூன்றாம் நிலை வசிப்பின் பின்னர் எதிர்வரும் டிசம்பரில் வரவு செலவுத் திட்டத்திற்கான வாக்கொடுப்பு நடாத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்தவரவு செலவுத் திட்டம் நவம்பர் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த போதும் அது பின்னர் மாற்றத்துக்குள்ளாகியது குறிப்பிடத்தக்கதாகும்.

## பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த மற்றொருவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த மேலும் ஒரு நபர் சென்ற திங்கட்கிழமை சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

"பொடி சுதா" என அழைக்கப்படும் சுதா சிறிமால் பெர்னாண்டோ என்ற ஒரு பிள்ளையின் தந்தையே கொல்லப்பட்டவர் ஆவார்.

மொரட்டுவப் பகுதியில் முச்சக்கர வண்டியொன்றில் நண்பர்களுடன் சென்று கொண்டிருந்த இவரை வேறொரு முச்சக்கர வண்டியில் வந்த மூன்று நபர்கள் சுட்டுக்கொன்றதாகவும், கொலைக்கு ரீ-56 ரக துப்பாக்கி பயன் படுத்தப் பட்டதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வரும் மொரட்டுவப் பொலிசார் தெரிவித் துள்ளனர்.

## ஐ.தேசியக்கட்சி நாடு முழுவதும் 10ஆயிரம் கிளைகளை அமைக்கும்

(கொழும்பு)

கட்சியின் மீள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் பத்தாயிரம் கட்சிக் கிளைகளை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது.

இதுவரை கட்சி வெற்றி பெற்றஇடங்களில் மட்டுமே கிளைகளைக் கொண்டிருந்தது. ஆனால் புதிய திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் க்கட்சி கிளைகளைக் கொண்டிருக்கும்.

புதிய கிளை அமைக்கும் பணி வரும் ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# பிரதமருக்கு மக்கள் மீது அக்கறையிருப்பின் ஐ.தே.கவின் போராட்டத்தில் பங்கேற்க வேண்டும்

### ஐ.தே.க. முன்னாள் பா.உறுப்பினர் வலியுறுத்து

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு பொதுமக்கள் மீது உண்மையான அக்கறை இருக்குமானால் எதிர் வரும் 24 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி நடத்தவுள்ள போராட டத்தில் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் கே. வேலா யுதம் இந்த அழைப்பை விடுத்தார்.

தற்சமயம் தாம் எதிர்க்கட் சியில் இருந்திருந்தால் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிராகப் போராட்டம் நடத்த முன்வந் திருப்பதாக அண்மையில் மகிந்த ராஜபக்ஷ, கூட்டம் ஒன்றில் தெரிவித்தமை குறித்தே இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ் தோட்ட மக்களின் துயரத்தை மதிக்காது அரசாங்கத்தில் தமது கட்சி அரசியல் கருதி இணைந்து கொண்டுள்ளது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் தோட்டத் தொழிலாளர் களுக்கு உதவியளிக்கும் நிலைப் பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய பாரா ளுமன்ற உறுப்பினர் ராஜித சேனா ரட்ண, எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்புக் கோட்டையில் நடத்தவுள்ள அரசாங் கத்துக்கு எதிரான போராட்டத்தில் சுமார் 25 ஆயிரம் பேர் வரையில் பங்கேற்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அர சாங்க ஊழியர்களின் வேதனத்தை 70 வீதத்தால் அதிகரிப்பது மற்றும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப் படுத்துவது என்ற உறுதி மொழி களை அரசாங்கம் காப்பாற்றிக் கொள்ளவில்லை

இது இந்த உறுதி மொழிகளை வழங்கிய ஜே. வி. பியின் அமைச்சர்களான லால்காந்த போன்றவர்களின் அரசியல் சரித் திரத்தை வீழ்ச்சியடையச் செய்யும் என்பதால் அவரும்தமது போராடத் தில் பங்கேற்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (32)

# 8 விடுதலைப்புலிப்போராளிகளின் விளக்க மறியல் 14 நாட்கள் நீடிப்பு

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள 4 பெண்கள் உட்பட 8 விடு தலைப்புலிப்போராளிகளின் விளக்க மறியல் நேற்று முதல் மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப் பட்டுள்ளது.

கடந்த வருடம் யூலை மாதம் 14 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இவர்கள் பயணம் செய்த வாகனத்தில் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறி இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன் றத்தில் இவர்கள் மீண்டும் ஆஜர் படுத்தப்பட்ட போது எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும் உத்த ரவை நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் பிறப்பித்தார்.

# அதிகாரியின் ஒத்துழைப்புடன் அரச பண்ணையில் விலங்குவேட்டை

போபத்தலாவ அரசாங்க விலங் கின பண்ணையின் விடுதியில் இருந்து பெருந்தொகை சட்ட விரோத மரை இறைச்சி கைப்பற் றப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர் பில் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளதாகநுவரெலிய வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரி ஐ .எஸ் சிசிர குமார சில்வா தெரிவித்துள்ளார்.

இவர் அளித்த வாக்குமூலத் தின் அடிப்படையில் இந்த வனப் பிரதேசத்தில் நீண்ட நாளாக மரை இறைச்சி வேட்டை இடம்பெற்று வருவது தெரியவந்துள்ளது.

இதேவேளை கைது செய் யப்பட்டவரின் வாக்குமூலத்தின் படி இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு பண்ணை விடுதியின் முகாமையும் பின்புலமாக இருந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### இ.தொ.கா ஆதரவளிக்காது

சபாநாயகர்லொக்குபண்டாரவுக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் கொண்டுவரும் நம்பிக்கை இல் லாத் தீர்மானத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதர வளிக்காதென அமைச்சர் முத்து சிவலிங்கம் கூறியுள்ளார்.

# சிறந்த தலைமைத்துவம் இன்மையே நாட்டில் சமாதானம் மீறப்படக் காரணம்

### அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவிப்பு

நாட்டில் சிறந்த தலைமைத்து வம் இல்லாமையும் தலைமைத் துவத்தை ஏற்றுக்கொள்ளாமை யுமே நாட்டில் சமாதானம் மீறப் படக் காரணம் என தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜெயரட்ண கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக கூறு கையில், இன்று எமது நாட்டை எடுத்துக்கொண்டால் சிறந்த தலை மைத்துவம் இல்லை. அதன் காரணமாக மக்கள் தம் விருப்பத் தின்படி நடக்கின்றனர். இந்தச் செயற்பாடுகளினால் சமாதானம் மீறப்படுகின்றது.

இலங்கையின் இந்தப்பிரச் சினை யைத் தீர்க்க தமிழீழ விடுத லைப்புலிகளில் பத்துப்பேரும், சிறி லங்கா சுதந்திரக்கட்சியில் பத்துப் பேரும் ஐக்கிய தேசியக் கட்சியில் பத்துப்பேரும் ஜே.வி.பியில் ஐந்து பேரும் இணைந்து மனச்சாட்சியின் படி இந்த முப்பந்தைந்து பேரும் பேசினால் இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் இந்தப் பிரச்சினை களைத் தீர்க்க முடியும்.

உண்மையாக, நேர்மையாகப் பிரச்சினைகளைத் தீர்க்க முன் வராமையும், ஒவ்வொருவரும் தமது வேலை களினாலும் கௌர வம், மதிப்பு, அந்தஸ்து போன்ற வற்றை சிந்திப்பதனாலுமே இந்தப் பிரச்சினை நீண்டு செல்கிறது.

இதேவேளை அதிகாரத்தைப் பெறுவதற்கான பேராசையிலேயே இவர்கள் செயற்படுகின்றனர். இதனாலேயே இந்தப் பிரச்சி னையை தீர்க்க முடியாதுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

மீண்டும் புதுப்பொலிவு பெற்று வரும் கிளிநொச்சி நகரில்
தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்
டிப்ளோமா பாடநெறிகள் தமிழ் விளக்கங்களுடன்
Diploma in MS Office
Diploma in Desktop Publishing
Diploma in Computer Studies


Diploma in Computer Programming
Diploma in Web Design
Diploma in Computer Programming
அறிமுக கட்டணச் சலுகை
2900/- மட்டுமே
(தவணை முறையிலும் செலுத்தலாம்)
அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்களுகளும் பாடக்குறிப்புகளும் இலவசமாக வழங்கப்படும்.
இப்பாடநெறிகளுக்கான காலம் 4 மாதங்கள்
பாடநெறிகள் யாவும் மூன்றாம் நிலை தொழில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை.
கணினியியல் கல்லூரி - The Computer College
(Affiliated to Asian Computers)
யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-10404)

# புத்தளம் பா.உறுப்பினருக்கு 5 மாதங்களாக ஊதியம் இல்லை

(கொழும்பு)

ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி யின் புத்தளம்மாவட்ட எம்.பியான தசநாயக்காவுக்கு கடந்த 5 மாதங் களாக ஊதியம் வழங்கப்பட வில்லை என கட்சியின் பிரதான அமைப்பாளரும் வர்த்தக வாணி பத்துறை அமைச்சருமான ஜெய ராஜ் பெர்னாண்டோபுள்ளே பாரா ளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நடவடிக்கை களுக்கு முன்பாக அவர் இந்த முறைப்பாட்டைச் சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார். ஏனைய எம்பிக் களுக்கு ஊதியம் வழங்கப்படும் வேளை அவருக்கு வழங்காதிருப் பது பாரிய அநியாயம் என்று அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் லொக்குபண்டார இப்பிரச்சினையை ஆராய்ந்து முடிவெடுப்பதாகத் தெரிவித் துள்ளார்.

# இரத்தினக்கல் வியாபாரியின் மகன் பிஸ்டலுடன் பொலிசாரால் கைது

### - விடுவிக்க அரசியல் பிரமுகர்கள் முயற்சி

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதத்துடன் இரத்தினக்கல் வியாபாரியின் மகனொருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

சென்ற சனிக்கிழமை இரவு சொகுசுக்காரொன்றில் வந்த இவரைச் சோதனையிட்ட பம்பலப்பிட்டிப் பொலிசார் 'பிஸ்டல்' துப்பாக்கியொன்றை வைத்திருந்தமைக்காக இவரைக் கைது செய்துள்ளனர்.

இவர் அதிகாரம் மிக்க அரசியல் வாதிகளின் பிள்ளைகளின் கூட்டாளியென்றும், இதையடுத்து இவரை விடுதலை செய்யும் முயற் சியில் குறித்த அரசியல் வாதிகள் தீவிரம் காட்டுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.இவரிடம் இத்துப்பாக்கி எப்படி வந்தது என்பதை அறியப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

### -தனியார் மருத்துவமனைகளில் பணியாற்ற-

# அரச மருத்துவமனைகளில் பயிற்சி பெற்ற தாதியரே வேண்டும்

### -சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

அரசாங்க மருத்துவமனையில் பயிற்சி பெற்ற தாதியர்கள், ஏனைய ஊழியர்கள் தனியார் மருத்துவமனைகளில் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைக்கு சேர்க்கப்படுபவர்கள் அரசாங்க மருத்து வமனைகளில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என தனியார் மருத்துவமனைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



# தாயகம் திரும்பிய அகதிகளுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கல்


இந்தியாவில் அகதிமுகாம் களில் தங்கியிருந்து திருகோண மலைக்கு மீள் திரும்பியுள்ள இலங்கை தமிழ் அகதிகளில் 10ஆம் குறிச்சி திருக்கடலூர், குச்ச வெளி, கும்புறுபிட்டி, சல்லி மற்றும் நகர்ப்புறத்தைச் சேர்ந்த 25 பயனாளிகளுக்கு ஜீவனோபாயத்தை விருத்திசெய்வதற்காக மீன்பிடி வலைகள், வள்ளங்கள், மேசன் தொழிலுக்கான உபகரணங்கள், கோழிவளர்ப்புக்கான உதவிகள், கடந்த திங்கட்கிழமை திருமலை ஸ்ரீசண்முகா ஆண்கள் விடுதியில் கேட்போர் கூடத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் வைத்து வழங்கப்பட்டன. நிகழ்வின் பிரதம அதிதியாக திருமலை மாவட்ட புனர்வாழ்வுத் திட்டப்பணிப்பாளர் ஹுசெய்ன் மீன், ஜே.ஆர்.எஸ். திட்ட இணைப் பாளர் கணேஷ், சர்வதேச புலம் பெயர்தல் அமைப்பின் திட்ட அதிகாரி முரளிதரன் ஆகியோர் பங்குபற்றினர். (25)

# இரு ஊர்காவற் படையினரை விடுவிக்கக்கோரி ஹர்த்தால்

திருகோணமலை மாவட்ட சிங்கள பிரதேசங்களில் நேற்று முன்தினம் பூரண கடையடைப்பு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள் ளது. இதன் காரணமாக அப்பிர தேசங்களில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 10 ஆம் திகதி கோமரங்கடவல பிரதேசத்தில் 2 சிங்கள ஊர்காவல் படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் ஊடுருவிய சமயம் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ளார்கள். இவர்களை விடுதலை செய்யக் கோரி கடந்த ஒரு வார காலமாக வடக்கு கிழக்கு சிங்கள முன்னணியின் ஏற்பாட்டில் திருகோணமலை மணிக் கூட்டு கோபுர சந்தியில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகி ன்றது. இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையி லேயே நேற்றைய ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதற்கிடை யில் குறிப்பிட்ட 2 ஊர் காவல் படையினரை விடுவிப்பதற்கு விடு தலைப்புலிகள் மட்டக்களப்பு சிறைச சாலையில் உள்ள தமது போராளி கள் 10 பேரை விடுதலை செய்யு மாறு கோரியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை அரசாங்கத்தின் சமாதானச் செயல கம் ஊடாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் இந்த கோரிக் கையை முன் வைத்துள்ளதாகத் தெரிகின்றது. இருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இது சட்ட விவகா ரம் என்பதால் இதனை நிரா கரித்துள்ளதாக மற்றுமொரு தக வல் கூறுகின்றது.

ஓம்
வைத்தீஸ்வரன் துணை
அதிஷ்ட எண் சோதிடம்
வைத்திய சிகிச்சையால்குணமடைய முடியாத நோயாளர்கள், புத்திர பாக்கிய குறைபாடு உள்ள இளம்தம்பதிகள், இணைந்துவாழ விரும்பியும், முடியாது பிரிந்துவாழும் கணவன் மனைவி, வெற்றிபெற முடியாத காதலர்கள், மீள முடியாத கடன் தொல்லையால் தவிப்பவர்கள், வியாபார-வர்த்தகத் துறையில் வெற்றியீட்ட முடியாத தோல்விகண்டவர்கள், அதிஷ்டகரமான வியாபார விலாசம், ஸ்தாபன பெயர் அமைத்தல்
ஆகிய விடயங்களுக்கு மட்டும் கட்டணம் ரூபா 200/=
விசேடமாக மாணவர்கள் உட்பட சகல நடுத்தர வகுப்பினரும், நேரில் பயன்பெறுவதற்காகக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. அதிஷ்ட விருத்திப்பிரயோகம் நேரில் வரவும், நேரில் வரமுடியாதவர்கள் (ஆங்கில பிறந்த திகதி) பெயர், கையொப்பம் இட்டு சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் கட்டணம் ரூபா 150/= சி.எஸ்.ஆர்.ராஜேஸ்வரன், நடராசா வீதி, வல்வெட்டித்துறை என்ற பெயர் விலாசத்திற்கு மணியோடர் அனுப்பிவைக்கவும். காலக் கிரமத்தில் பதில் தாமதியாது தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.
T.P. மூலம் தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளலாம். T.P. : 021-2222810
மிலேனியம் உல்லாசப் பயணிகள் விடுதி உங்களை அன்புடன் வரவேற்கிறது.
76/60 இராமநாதன் வீதி, கலட்டி - யாழ்ப்பாணம்.
புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில்- 10 AM-4PM
எண் கலை ஆசான் ஸ்ரீமாஸ்ரர், சி.எஸ்.ஆர்.ராஜேஸ்வரன்.
புவனஜோதி, நடராசா வீதி, கிழக்குவீதி, வல்வெட்டித்துறை.
ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில்-7AM-5PM
(சி-10462)


யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில்
விற்பனை முகவர்கள் தேவை
யாழ். மண்ணில் புதியதோர் உதயம்
WASANA மோட்டார் சைக்கிள்கள்


சீனத் தயாரிப்பில் புத்தம் புதிதான தொழில் நுட்பத்துடன் Brand New Motor Cycle மிகவும் குறைந்த விலையில் தரமான உற்பத்தியுடனும் உறுதியுடனும் தயாரிக்கப்பட்டு, உங்கள் சொகுசு பயணத்திற்காக உத்தரவாதத்துடனும் Free Service உடனும் வழங்கப்படுகிறது.
"ஒவ்வோர் இல்லத்திலும்" வாசனா இத்துடன் ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் புதிய மினிகப் வான்கள், கன்ரர்கள், ட்ரக் ஆகியவற்றிற்கும் முகவர்கள் தேவை.
*வெகுவிரைவில் யாழ். மண்ணிலும், வவுனியாவிலும் "வாசனா" வின் கண்காட்சி நடைபெறும்.


மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
இல. 03, நவீன சந்தை மேற்புறம்
(மக்கள் வங்கி-காங்கேசன்துறை கிளை அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 222 6286, 077 6627373
(சி-10460)

Srilanka Red Cross Society, Kilinochchi Branch
கணினிப் பயிற்சித் திட்டம்-2004/2005
இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையினால் தகவல் தொழில் நுட்பத்திறனை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு அமைய மீண்டும் "புதிய பிரிவுகள்" ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன மேலதிக விபரங்களுக்கும, விண்ணப்பப்படிவத்திற்கும் இ.செ.சங்கம், கணினிப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.
Diploma in Office Management
(Duration-05,Months)
Diploma in Desktop Publishing
(Duration-05,Months)
(சி.10230)
விண்ணப்ப முடிவுத்திகதி :- 27-09-2004

## பாராட்டும் வாழ்த்தும்



**சமாதான நீதவான்**
**சின்னையா பொன்னையா**
வள்ளிபுனம்-புதுக்குடியிருப்பு

முல்லைத்தீவு வள்ளிபுனத்தைச் சேர்ந்த சின்னையா பொன்னையா அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் வவுனியா மாவட்ட நீதிபதி எம.இளஞ்செழியன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

முல்லைத்தீவு தேவிபுரம் வித்தியாலயம், உடையார்கட்டு குரவில் வித்தியாலயம், வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லம் ஆகியவற்றின் ஆங்கில ஆசிரியரான இவர் வள்ளிபுனம் ஸ்ரீநடனமிட்டான் விநாயகர் ஆலயத்தின் செயலாளராகவும் புதுக்குடியிருப்பு பல.நோ.கூ சங்கம், வள்ளிபுனம் கிளைக்குழுத் தலைவராகவும் இதே சங்கத்தின் பேராளராகவும் பணிபுரிகின்றார்.

யாழ்ப்பாணம் மில்க்வைற்சோப் தொழிலகத்தின் ஓய்வுப்பெற்ற விற்பனைப் பிரதிநிதியான இவர் நாவலடிப்பிட்டி, கிரைஹெட் அலுகொல்ல பிரிவு காலஞ்சென்ற முத்தன் சின்னையா நாகம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரான இவர் நீடூழி வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துவோம்.

இ.உதயகுமாரன் - மருமகன்,
மருதம் வாணிபம்,
உ.சிவசோதி-மகள்,
உடையார்கட்டு.

(5121)

## வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட" நிறுவனத்தில் தரம் "எம்9" அல்லது அதற்கு மேற்பட்டதரத்திற்குப்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி 2004.10.11 பி.ப. 2.00மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி 2004.10.12 ந.ப. 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கும் திகதி 2004.10.12. பி.ப. 3.00 மணி

| வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விபத்திரப்பணம் (வற் உட்பட) |
|---|---|---|
| 01. தாவடிப் பாடசாலை வீதி திருத்தம் | 8000.00 | 575.00 |
| 02. கந்தரோடை நலன்புரி நிலைய வீதி திருத்தம் | 3500.00 | 575.00 |
| 03. மல்வம் ஞானப்பிரகாசர் குறுக்கு வீதி திருத்தம் | 1500.00 | 575.00 |
| 04. ஏழாலை இலங்கையர்கோன் வீதி திருத்தம் | 2000.00 | 575.00 |
| 05. இணுவில் அளவோடைவீதி திருத்தம் | 11000.00 | 575.00 |
| 06. உடுவில் லவ்லேன் திருத்தம் | 2000.00 | 575.00 |
| 07. சுன்னாகம் சந்தை தெற்குவீதி திருத்தம் | 5000.00 | 575.00 |
| 08. உடுவில் நாவலடி ஒழுங்கை திருத்தம் | 3500.00 | 575.00 |
| 09. இணுவில் வட்டுவினி அம்மன் வீதி திருத்தம் | 7000.00 | 575.00 |
| 10 அலுவலகத்திற்கு களஞ்சியறை அமைத்தல் | 8000.00 | 575.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை "செயலாளர்', வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும், அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம் யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுற மேல்மூலையில் வேளையின் பெயர் வேலையின் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்குப்பிரதேச சபை,
சுன்னாகம்.

திருமதி.ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலி தெற்குப் பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி.10461)

ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 International Cricket Council ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 International Cricket Council ICC CHAMPIONS TROPHY ENGLAND 2004 International Cricket Council

# மேற்கிந்தியத்தீவிடம் பணிந்தது பாகிஸ்தான்



ஐ.சி.சி கிண்ணத்துக்கான இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தானை இலகுவாக தோற்கடித்த மேற்கிந்தியத்தீவு அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இங்கிலாந்து ரோஸ் பவல் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் தாங்களே துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

இதற்கமைய துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் இரண்டாவது பந்துவீச்சிலேயே தனது முதலாவது விக்கெட்டை ஒரு ஓட்டத்துக்கு இழந்தது.



அதன் பின்னர் ஓட்டங்களைக் குவிப்பதில் பலத்த சிரமத்தை எதிர்கொண்ட பாகிஸ்தான் வீரர்கள் மேற்கிந்தியத்தீவு பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாது 38.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் யசீர் ஹமீட் 39 ஓட்டங்களையும், அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் 21 ஓட்டங்களையும், மாலிக் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.மூன்று வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.



பந்துவீச்சில் கொலிமோர், பிரைவோ, கெயின்ஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பகுதிநேர பந்துவீச்சாளர்களைக் கொண்டு அணித்தலைவர் பிரைன் லாறா பாகிஸ்தான் அணியை மிகக் குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியுள்ளதாகக் கிரிக்கெட் வர்ணனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பதிலுக்கு இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவு 28.1 ஆவது ஓவரில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து, 7 விக்கெட் டுக்களால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் துணைத்தலைவர் சர்வான் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும், பிரைன் லாறா 31 ஓட்டங்களையும் பெற்றனர். சந்தர் போல் 11 ஓட்டங்களைப் பெற்று மாலிக்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.



ஆரம்ப இரு விக்கெட்டுக்களையும் அக்தார் கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சர்வான் தெரிவானார்.

நாளை மறுதினம் ஓவல் மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை மேற்கிந்தியத்தீவு எதிர்த்தாடும்.

லாறா உபாதை காரணமாக ஆடுகளத்தை விட்டு வெளியேறினார். அக்தார் வீசிய பந்து அவரது கழுத்துப் பகுதியை மிக வேகமாக வந்து பதம்பார்த்ததன் காரணமாக துடுப் பெடுத்தாட முடியாத நிலை.

அவரது வலது புறப்பக்கத்தில் அடிபட்டதன் காரணமாக பந்தினை எதிர்கொண்டு பார்ப்பதற்கு கடினமாக அமைந்ததால் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

## தென்னாபிரிக்காவுக்கு 8ஆவது இடம்

ஐ.சி.சி. தரவரிசையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி எட்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து அணித்தலைவர் சிமித் தெரிவிக்கையில்:

ஓரிரு தோல்விகள் காரணமாக எட்டாம் இடத்துக்குச் சென்றுள்ளோம். தொடர்ந்து வெற்றிபெற்றால் மீண்டும் இரண்டாமிடத்திற்கு வந்துவிடுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் தோல்வி, சிறிலங்காவில் தோல்வி, ஐ.சி.சி மினி உலகக் கிண்ணப் போட்டியில் தோல்வி எனத் தொடர் தோல்விகளைச் சந்தித்து வரும் தென்னாபிரிக்க அணி 8ஆம் இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

எங்களுடைய அணியில் எந்தவித பிரச்சினையும் அல்ல. நன்றாக விளையாடுகின்றோம். என்ன நடந்தது என்பது எங்களுக்கே தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பயிற்சியாளர் எரிக் சைமன் தெரிவிக்கையில் நாம் எதிர்காலத்தில் வெற்றி பெறுவோம் என சிறுபிள்ளைத்தனமாகத் தெரிவித்துள்ளார்.

## இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறும் உறுதியாக நம்பினேன்–கும்ளே

பாகிஸ்தானை வீழ்த்தி அரையிறுதிக்கு நமது அணி முன்னேறி விடும் என உறுதியாக நம்பியிருந்தேன். காரணம் கடந்த சில போட்டிகளில் நமது ஆட்டம் நன்றாக இருந்தது. ஆனால் துடுப்பாட்டம் தொடங்கியதும் எல்லாமே மாறிவிட்டது என சுழல்பந்து வீச்சாளர் அனில் கும்ளே தெரிவித்தார். ராகுல் ராவிட், அஜித் அகார்கர் பொறுப்பாக ஆடியிருக்காவிட்டால் இந்த 200கூட வந்திருக்காது.

நமது துடுப்பாட்ட வீரர்கள் இன்னும் ஒரு 20-30 ஓட்டங்கள் எடுத்திருந்தால் கூட வென்றிருக்க முடியும். எட்ஜ் பாஸ்டன் ஆடுகளத்தில் 230 ஓட்டங்கள் என்பது பெரிய ஓட்டங்கள் 1999 உலகக்கோப்பைப் போட்டியில் இதே ஆடுகளத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியபோது நாம் எடுத்திருந்த மொத்த ஓட்டம் 230 அந்தத் தொடரில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா இடையே சம நிலையில் முடிந்த அரையிறுதிப் போட்டியிலும் குறைந்த ஓட்டங்களே இங்கு எடுக்கப்பட்டது என்றார்.

## நவீன எலும்பு மூட்டு சிகிச்சையே டெண்டுல்கருக்கு சிறந்தது



முராரி

சச்சின் டெண்டுல்கருக்கு கையில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு நவீன எலும்பு மூட்டு சிகிச்சைதான் (ஆஸ்ரியோபதி) சிறந்தது என மும்பை டாக்டர் கிருஷ்ணா முராரி மோடி கூடியுள்ளார். முன்னாள் இந்திய அணித்தலைவர் வெங்சர்க்காருக்கு முதுகில் வலி ஏற்பட்டபோது இதே சிகிச்சையைத்தான் அளித்தாரா அவர் தற்போது சச்சினுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு நவீன எலும்பு மூட்டு சிகிச்சைதான் அற்புதமான தீர்வு என உறுதி கூறுகிறார் முராரி.

இங்கிலாந்தில் டெண்டல்கருக்கு அளிக்கப்பட்ட 'ஷாக்' சிகிச்சை முறை தற்காலிகமான நிவாரணம் மட்டுமே தரும். விளையாடத் தொடங்கியதும் சச்சினுக்கு மீண்டும் வலி ஏற்படும் எனவும் அவர் கூறுகிறார். ஆகவே நவீன எலும்பு மூட்டை சிகிச்சை மூலமே சச்சினால் மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்ப முடியும் என்கிறார் டாக்டர் முராரி தமக்குச் சிகிச்சை அளித்ததை வெங்சர்க்காரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

## ஜீ.டி.வி. ஒளிபரப்பு உரிமை இரத்து ஒப்பந்தம் யாருக்கு இன்னும் இருபது நாளில்

இந்தியாவில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை 4 ஆண்டுகளுக்கு ஜீ டி.வி ஒளிபரப்புச் செய்ய வழங்கப்பட்ட உரிமையை இரத்துச் செய்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியாவில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை 4 ஆண்டுகளுக்கு ஒளிபரப்பு செய்யும் உரிமைக்காக ஜீ டி.வி மற்றும் ஸ்டார்ஸ் போர்ட்ஸ் அலைவரிசைகள் போட்டியிட்டன. சென்னையில் நடந்த இந்திய கிரிக்கெட் சபையில் கூட்டத்தின்போது இந்த உரிமை ஜீ டி.வி கொடுக் கப்பட்டது. 4 ஆண்டு உரிமையை ரூபா 1350கோடி கொடுத்து ஜ.டி.வி வாங்கியது. இந்த நிலையில் இந்த உரிமையை எதிர்த்து மும்பை உயர்நீதிமன்றம் ஸ்டார் றில் ஸ்போர்ட்ஸ் வழக்குத் தாக்கல் செய்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கடந்த சில நாட்களுக்கு இரு தரப்பு வாதங்களையும் கேட்டபின்னர் ஜீ டி.வி மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் ஆகியவற்றுக்கு ஒளிபரப்பு உரிமை பெறத் தகுதியில்லை என்று கூறினார். இதனால் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டது. இதற்கிடையே கிரிக்கெட் ஒளிபரப்பு உரிமையாருக்கும் கொடுக்கப்படவில்லை . ஜீ டி.வி யுடனான ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதாக இந்தியக் கிரிக்கெட் சபை சார்பில் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த முடிவை யாரும் எதிர்பார்க்கவில்லை. இதையடுத்து நீதிமன்றில் தொடுத்த வழக்கை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் அலைவரிசை வாபஸ் பெற்றுக்கொண்டது. ஆவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியை கிரிக்கெட் வாரியம் தனது சொந்தச் செலவில் ஒளிபரப்புச் செய்யவுள்ளதாகவும் ஒப்பந்தம் யாருக்கு? என்பதை இன்னும் 20 நாட்களில் முடிவு செய்வதாகவும் கிரிக்கெட்சபை சார்பில் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. கிரிக்கெட் வாரியத்தின் இந்த முடிவால் சி.டி.வி அதிர்ச்சி அடைந்துள்ளது.

## பாக். முக்கோணத் தொடரைக் கைப்பற்ற சிம்பாப்வேக்கு 50 சதவித வாய்ப்புள்ளது

டடென்புதைபு



இளம்வீரர்களைக்கொண்ட அனுபவம் குறைந்த சிம்பாப்வே அணி பாகிஸ்தானில் நடைபெறவுள்ள முக்கோணத் தொடரை கைப்பற்றுவதற்கான 50 சதவீத வாய்ப்பினைக் கொண்டுள்ளதாக அணித்தலைவர் டடென்புதைபு தெரிவித்துள்ளார்.

தற்போது பாகிஸ்தானுக்குச்சுற்றுலா மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி அங்கு பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.

லாகூரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர்;

சிம்பாப்வே வீரர்கள் தற்போது அனுபவங்களைப் பெற்றுள்ள நிலையில் எதிரணிகளைச் சிறந்த முறையில் எதிர்த்தாடும் வன்மையைப் பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். சிறிலங்கா,சிம்பாப்வே, பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கும் முக்கோண ஒருநாள் தொடர் இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இத் தொடரில் மொத்தம் 7ஆட்டங்கள் நடைபெறவுள்ளது.

எமது அணியில் 18, 19 வயதுடைய கூடுதலான வீரர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் கூடிய போட்டிகளில் பங்கேற்பதன் மூலம் இவர்கள் நிறைய அனுபவங்களைப் பெற்றுத் திறமைகளை வலுப்பெறச் செய்து கொள்ள முடியும் எனவும் தைபுமேலும் தெரிவித்தார்.




## சுற்றுப்போட்டி

உருத்திரபுரம் சந்திரோதயா விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாவீரர் வெற்றிக் கேடயத்திற்கான கால் பந்து, கரப்பந்து சுற்றுப் போட்டிகள் இம்மாதம் இறுதிக்குள் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில், கலந்து கொள்ளவிரும்பும் கழகங்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேலும் கேட்டுள்ளனர்.


## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கிளி.அணிக்கு மூன்றாம் இடம்



அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடாத்திய முப்பதாம் ஆண்டு கரப்பந்தாட்ட நிறைவுச்சுற்றுப் போட்டி கடந்த 18,19 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் அச்சுவேலியில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் முன்னணி அணிகள் 16 கலந்துகொண்ட இச் சுற்றுப்போட்டியில் பலம் வாய்ந்த அணிகளுடன் கிளிநொச்சி கரப்பந்தாட்ட அணியும் கலந்துகொண்டு மூன்றாம் இடத்திற்கான வெற்றிக் கேடயத்தினைச் சுவீகரித்துக் கொண்டது. மேற்படி 16அணிகளுடன் ஒப்பிடுகையில் கிளிநொச்சிக் கரப்பந்தாட்ட அணி சிறந்த விளையாட்டு அணியாக தெரிவு செய்யப் பெற்று அதற்கான கேடயத்தினையும் பெற்றுக் கொண்டது.மேற்படி குழுவினரை தமிழீழ விளையாட்டுத்துறை கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் ராஜா, கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் நேற்று முன்தினம் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ)



## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி; மக்களின் நல்வாழ்விற்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## உடன் பாட்டிற்கு மாறாக

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் முகாம்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை விரிவாகப் பெற்றுத்தருமாறு கண்காணிப்புக்குழுவிடம் கோருவது போர்நிறுத்த உடன்பாட்டிற்கு உட்பட்ட விடயமுமல்ல. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குரிய பணியாக இதனைக் கொள்ளவும் முடியாது.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் படி இருதரப்பின் முன்னணி நிலைகளில் உள்ள காவலரண்கள், முகாம்கள் என்பன அவரவர் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து முன்நோக்கி நகர்த்தப்படுகின்றனவா? என்பதைக் கவனிப்பது மட்டுமே கண்காணிப்புக்குழுவின் பணியாகும். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எங்கு முகாம்கள் உள்ளன? எத்தனை முகாம்கள் உள்ளன? என்பதைப பற்றிய தகவுல்களைக் கண்காணிப்புக்குழு வழங்குவதானால் அது இராணுவப்புலனாய்வுத்துறையின் வேலையாகிவிடும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி விடுதலைப்புலிகளும் சரி, சிறிலங்கா ஆயுதப்படையினரும் சரி தத்தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புதிய முகாம்களை அமைப்பதோ, அன்றி படையணிகளுக்கு ஆளணிகளைச் சேர்ப்பதோ, அன்றி ஆயுதங்களை கொள்வனவு செய்வதோ எவையுமே கட்டுப்படுத்தப்படவில்லை.அங்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ள விடயமானது. ஒருவரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மற்றவர் ஆயுதங்களுடன் பிரவேசித்தல் கூடாது என்பதே. இதனையே கண்காணிப்புக்குழுவும் எதிர்நோக்குகின்றது.

இதேவேளை யுத்தநிறுத்த உடன்பாட்டின் படி இருதரப்பு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் ஏற்கனவே கண்காணிப்புக்குழு வரையறை செய்திருத்தல் வேண்டும். இந்நிலையில், விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் புதியமுகாம்களை அமைத்தால் என்ன? பயிற்சிகளை நடத்தினால் என்ன? அது குறித்து தகவல் கோருவதோ அதை ஒரு யுத்தநிறுத்த மீறல் போன்று சித்திரிக்க முனைவதோ, யுத்தநிறுத்த உடன் பாட்டைத் தவறான பாதையில் இட்டுச்செல்வதாகிவிடும்.

அவ்வாறு சிறிலங்காப் படைத்தரப்புக் கோருவதானால் அண்மையில் கிழக்கில் பாதுகாப்பு நடவடிக்கையினால் பலப்படுத்தல் என்ற ரீதியில் சிறிலங்காப் படைத்தரப்பு அமைத்துவரும் காவலரண்கள் புதிய படைநிலைகள்போன்றவற்றிற்கான தகவல்களை விடுதலைப்புலிகள் கோரினால் அதனைச் சிறிலங்காப் படைத்தரப்புத் தான் கொடுக்குமா? கண்காணிப்புக்குழுதான் பெற்றுத்தருமா?

இத்தனைக்கும் சிறிலங்காப் படைத்தரப்பு அமைக்கும் புதிய காவலரண்கள் மற்றும் படைநிலைகள் என்பன புரிந்துணர்வு உடன்பாட்டின் நோக்கத்திற்குமாறானதாகும். அதாவது இயல்பு வாழ்வைத் தோற்றிவித்தல் என்ற அடிப்படை நோக்கத்திற்கு எதிரானதாகும். ஆனால் இது குறித்து சிறிலங்கா அரச தரப்பு அலட்டிக் கொண்டதாகவோ கண்காணிப்புக்குழு கண்டு கொண்டதாகவோ இல்லை.

இவை ஒருபுறம் இருக்க விடுதலைப்புலிகள் தமது முன்னணிக் காவல் நிலைகளைப் பலமான நிலையில் வைத்துக் கொள்ள வேண்டியதான தேவையும். நிர்ப்பந்தமும் கூட தற்பொழுது ஏற்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் முன்னணிக் காவல் நிலைகள் மீது ஊடுருவித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதும் உண்டு. தாக்குதல் முயற்சிகள் புலிகளால் முறியடிக்கப்பட்டதும் உண்டு.

இத்தகைய தாக்குதல் முயற்சிகள் சிறிலங்கா இராணுவத் தரப்பின் ஆலோசனை, ஒத்துழைப்பு என்பனவற்றின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு சில நடவடிக்கைகளில் சிறிலங்கா இராணுவத்தரப்பும் நேரடியாகப் பங்கேற்றதும் உண்டு. இத்தகையதொரு நிலையில், விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதென்பது தவிர்க்கமுடியாததொன்றே ஆகும்.

இவை ஒருபுறம் இருக்க- திருமலைத்துறைமுகத்தை யுத்த நிறுத்த உடன்பாட்டின் பின்னர் தான் புலிகளால் நெருங்கி வரமுடிந்துள்ளது எனக் கூறுவதிலும் எந்தவித அர்த்தமும் இல்லை. ஏனெனில் திருமலைத்துறைமுகம் யுத்தம் நடந்த காலத்தில் எப்பொழுதும் சிறிலங்கா ஆயுதப்படையினரின் முழுமையான பாதுகாப்பில் இருந்ததில்லை. திருமலைத்துறைமுகதின் உள்ளேயும், வெளியேயும், அதனைச் சூழவுள்ள கடல், தரைப் பிரதேசங்களிலும் விடுதலைப்புலிகளால் பல தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுண்டு.

இந்நிலையில் யுத்தநிறுத்த உடன்பாட்டின் பின்னரே திருகோணமலைத்துறைமுகத்திற்கு அண்மையில் புலிகள் வந்துள்ளது போன்றும், திருகோணமலைத்துறைமுகத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது போன்றும், சித்திரிக்க முயல்வதும், அதை விவகாரமாக்க முனைவதும் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு யுத்தநிறுத்த உடன்பாட்டைக் குழப்பத்திற்கும், நெருக்கடிக்கும் உள்ளாக்கும் விவகார நோக்கம் கொண்டசெயற்பாடாகவே கொள்ளத்தக்கதாகும்.

ஆனால் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு கோருகின்றது என்பதற்காகவோ, திருகோணமலைத்துறைமுகம் விடுதலைப்புலிகளின் தாக்குதல் எல்லைக்குள் வந்துவிடும் என்பதற்காகவோ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கும் காவலரண்களையோ, படைநிலைகளையோ பின்நகர்த்துதல் என்பது சாத்தியமாகமாட்டாது. தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் மக்களின் சொந்தக்குடியிருப்பு நிலங்களை அடாவடித்தனமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா ஆயுதப்படையினர் தமிழர் தாயகப்பகுதியில், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் படைநிலைகளை அகற்றக்கோருவதும், அவை குறித்துத் தகவல் கோருவது அர்த்தமற்றதொன்று. அதனை வழங்க முனைவதும் தேவையற்றதொன்று.

# வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்பே

# மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்க முடியும்

### -மாகாணசபைகள் அமைப்புத் தெரிவிப்பு

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்ட பின்னர் மாகாண சபைக்கான சகல அதிகாரங்களும் வழங்க முடியும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் கூறியுள்ளார்.

தற்போதைய நிலையில் மாகாண சபைகளுக்குச் சகல அதிகாரங்களையும் வழங்கும்போது சிக்கல்கள் எழுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

12 ஆவது மாகாணசபை முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசும்போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்று இந்த மாநாட்டின்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த அதிகாரம் உரிய முறையில் பயன்படுத்தப்படாது விட்டால் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும். எனினும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் பின்னிற்பதில்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

# ஊர்காவல் படையினரை விடுவிப்பதில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் தடையாகவுள்ளது

### -பாராளுமன்றத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

(கொழும்பு)

திருகோணமலையில் வைத்து விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 ஊர்காவல் படையினரை விடுவிப்பதற்கு சகலவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென்று பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றுகையில் இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் திடசங்கற்பம் கொண்டுள்ள போதிலும் முன்னைய அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் காரணமாக தங்களது நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறினார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்கம் நடந்து கொண்டு வந்துள்ளது.

தம்வசமுள்ள 2 ஊர்காவல் படையினரை விடுவிக்க விளக்கமறியலிலுள்ள விடுதலைப்புலிகள் உறுப்பினர்களை விடுவிக்க வேண்டுமெனக் கேட்கப்படுகிறது. நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை இந்த வகையில் விடுவிக்கமுடியாது.

எனவே விடுதலைப்புலிகளின் கோரிக்கையினைப் பூர்த்தி செய்வதென்பது அரசாங்கத்தினால் இயலாத விடயமாகும் எனவும். அதே சமயம் ஊர்காவல் படையினர் தடுத்துவைக்கப்பட்டதை அரசாங்கம ஏற்றுக் கொள்ளமாட்டாது என்றும் அத்த கைய நடவடிக்கைகளை அரசாங் கம் தீவிரமாகக் கண்டனம் செய்கின் றது என்றும் அவர் மேலும் தெரி வித்தார்.

விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கையில் 2ஊர்காவல் படையினரை உடனடியாக விடுவிப்பதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், நோர்வே அரசாங்கத்தினதும் உதவிகள் பெற்றுக் கொள்ளப் பட வேண்டுமென்று கூறினார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்னயை அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் தடையாக வுள்ளது என்று கூறிய வீரவன்ச இவர்களை விடுவிப்பதற்கென அரசாங்கம் ஏற்கனவே பலதரப்பட்ட நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சிறிலங்கா இராணுவத்தின் எந்திரவியல் பிரிவுக்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ எந்திரவியல் பிரிவிற்கு ஆட்சேர்ப்புச் செய்யப் படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகத்தினால் இதற்கான அறிவித்தல்கள் விடுக்கப்படுகின்றன.

இந்த ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப் பரீட்சைகள் வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை இருவப்பனை சிறப்புப்படை தலைமையகம், பனாகொட தலைமையகங்கள், எம்பிலிப்பிட்டிய இராணுவ பொறியியல் கல்லூரி, மின்னேரியா பொறியியல் பிரிவு, பனாகொட, மத்தேகொட இராணுவ முகாம்கள், கொஸ்கம கட்டளைத் தலைமையகம் ஆகிய இடங்களில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வன்னிக்குச் செல்லவேண்டாம்

### -மல்வத்தப் பீடாதிபதியிடம் சிங்கள அமைப்புக் கோரல்

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு வன்னிக்குச் செல்ல வேண்டாம் என்று உலக சமாதான ஒன்றிணைப்பு எனும் அமைப்பு மல்வத்தப் பீடத்தின் மகாநாயக்கரிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மகாநாயக்கரின் இந்த விஜயம் விடுதலைப் புலிகளின் வன் செயல்கள் இடம்பெற்ற சமயம் மௌனம் சாதித்த விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுக்குப் பெருமளவு ஊக்கத்தை அளிக்குமென்று அது தெரிவித்துள்ளது.

பேச்சாளர் ஒருவர் மேலும் கருத்து வெளியிடுகையில் மல்வத்தப் பீடத்தின் மகாநாயக்கர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவோரை விடுதலைப்புலிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களும் உள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

# அரசாங்க உயர் நியமனங்களில் அரசியல் தலையீடு அதிகரிப்பு

### -ரான்ஸ் பரன்சி இன்ரநஷனல் குற்றச்சாட்டு

இலங்கையில் பொதுத் தேர்தலின பின் அரசு உயர்பதவிகளில் அரசியல் தலையீடு அதிகரித்திருப்பதாக ரான்ஸ்பரன்சி இன்ர நஷனல் குற்றம் சாட்டியுள்ளது குறிப்பாக அரசாங்கத்தின் உயர்மட்டப்பதவிகளில் தலைமைக்கு விசுவாசமானவர்களைத் தவறான முறையில் அல்லது பொருத்தமற்ற வகையில் நியமனங்கள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து ரான்ஸ் பரன்சி இன்ரநஷனல் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசாங்க நியமனங்களில் தராதரம் முக்கிய விடயமாகக் கருதப்படுகின்ற போதிலும் பல உயா பதவிகளுக்கு அரசியல் நியமனங்கள் இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்று பெரும் பான்மையுடன் நிறைவேற்றம்

உள்நாட்டு அரச துறை பொதுமன்னிப்பைச் சீர் செய்யும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் 50 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப் பட்டுள்ளது.. இதற்கு ஆதரவாக 112 வாக்குகளும், எதிராக 62 வாக்குகளும் செலுத்தப்பட்டுள்ளன. ஜாதிக ஹெலஉறுமய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.ஐ.தே.கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை.

(32)

# சந்திரிகாவின் ஐ.நா சபை பேச்சு

# மீண்டும் யுத்த சூழ்நிலை உருவாக்கும்

## பாராளுமன்றத்தில் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

சனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய விதம் நாட்டில் மீண்டும் ஒருமுறை யுத்தம் ஏற்படும் நிலையை உருவாக்கக்கூடும் எனத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். நேற்றுப் பாராளுமன்றத்தில் வரி மன்னிப்பு திருத்தச்சட்டமூல விவாதத்தில் உரையாற்றிய அவர், அமெரிக்காவையும், இந்தியாவையும் தம்பக்கம் இழுத்து அரசாங்கம் யுத்தம் ஒன்றுக்குத் தயாராக இருப்பது போன்றதான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் யுத்தத்துக்கு தாமும் தயார் எனப் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். சனாதிபதி சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த 18 மாத காலமாக பேச்சுவார்த்தை ஒன்றுக்கு வராமல் இருப்பதாகக் கூறியுள்ளமை சர்வதேச மத்தியில் அவர் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பில் பொய்க் குற்றச்சாட்டை சுமத்தி அவர்களுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இந்தியாவின் உதவியைப் பெறுவதற்கு முனைவதையே எடுத்துக்காட்டுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் எப்போதும் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தயாராக இருக்கின்ற போதும் அரசாங்கமே பேச்சுவார்த்தைக்கு இழுத்தடிப்புச் செய்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். இந்த நிலையில் தமிழ் மக்கள் மீது யுத்தம் ஒன்று திணிக்கப்படுமானால் அதனை எதிர்கொள்ள தமிழ் மக்களும் தயார் எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (32)

-புலிகளின் குரல் வெளியீடான-

# “போர்நடந்த மண்ணில்” நூல் நாளை யாழ்.இல் வெளியீடு

புலிகளின் குரல் வெளியீடான"போர்நடந்த மண்ணில்' நூல் வெளியீட்டு விழா நாளை பி.பகல் 4.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 2001ம் ஆண்டு நடாத்தப்பட்ட வானொலி 11 மற்றும் கேணல் கிட்டு நினைவு கலை இலக்கியப் போட்டிகளில் பரிசுபெற்ற படைப்புக்களைத் தாங்கி இந்நூல் வெளி வருகின்றது.

இதில் போராளி மலைமகள், போராளி தூயவன், போராளி அரும்பொருள், போராளி யோகன், யோ. கர்ணன், ஆகியோர் எழுதிய சிறுகதைகளும், தனுசியா மகேந்திரன், போராளி யாழ்வீரன், ஊஉவன், போராளி ரகுபதி, போராளி கவியழகன் ஆகியோர் எழுதியகவிதைகளும், மலர்அன்னை ஆவரங்கால் சுதன், போராளி ஆ.ந.பொற்கோ, பிரசுன் போராளி கை.சரவணன் ஆகியோர் எழுதிய நாடகங்களும், போராளி பழனி, போராளி செந்தோழன், போராளி செங்கயன் ஆகியோர் வரைந்தனுப்பிய ஒளிப்படங்களும் போராளி நீதன், கெங்காதரன், காங்கேசன், பயஸ்ராஜா ஆகியோரது ஓவியங்களும், போராளி புரட்சி, போராளி யாழ்வீரன், போராளி கலையழகன் ஆகியோர் எழுதிய கட்டுரைகளையும் தாங்கி இந்நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

# புலிகள் பேச்சுக்கு வருவதை நிராகரித்தாலும் அரசு தேவையான நடவடிக்கையை எடுக்கிறதாம்

## ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

18 மாதங்களாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதை நிராகரித்திருந்தாலும் அரசாங்கம் நோர்வேயினூடாக சமாதானப்பேச்சுவார்த்தைகளை முன் கொண்டு செல்வதற்குத தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐக்கியநாடுகள் சபையின் ஐம்பத்தொன்பதாவது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிறிலங்கா சனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; யுத்தத்தை நிறுத்துவதற்கு தமது அரசாங்கத்திற்குத் தெளிவான ஆணை கிடைத்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலமான தீர்விற்கு வர அரசாங்கம் நடவடிக்கை மேற் கொண்டுவருவதாகவும் கூறினார்.

இதேவேளை இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பான சர்வதேச சமூகத்தின் கடமையைப் பாராட்டி நன்றி கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையை இந்தியாவிற்கு வழங்குவது தொடர்பாக இலங்கை பூரண ஆதரவை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் கூறுகையில்; ஆசியாக் கண்டத்தின் நிலைமைகளை நாம் நன்றாக ஆராய்ந்துள்ளோம் இந்தக் கண்டம் உலகிலே அதிக சனத்தொகையைக் கொண்ட கண்டமாகும். அதிகரித்து வரும்பொருளாதார மையங்களின் நிழலாக இந்தக் கண்டம் உள்ளது.



எனினும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் உரிய அங்கத்துவம் இல்லை.

தலைவர் அவர்களே! பிறேசில் ஜேர்மனி, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் நிரந்தர அங்கத்துவம் பெற விண்ணப்பித்துள்ளன.

இலங்கை இவர்களின் எதிர்பார்ப்பிற்கு ஆதரவு வழங்கும் என்றும் கூறினார்.

எந்தவோர் அரசாங்கமும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் படைப்பலத்தையும், வன்முறைகளையும் இறுதியில்தான் கடைப்பிடிக்க வேண்டுமென சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் பிரதான தந்திரோபாயம் படைப்பலத்தைப் பயன்படுத்துவதென அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியிருந்தார் அக் கருத்துக்கள் தமக்கு உடன்பாடு இல்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சுமுகமாக...

யினரும் சந்தித்துப்பேச உடன்பாடு காணப்பட்டதுடன், வன்செயலற்ற ஒரு நிலையில் படையினரை வைத்திருத்தல் பற்றியும் உடன்பாடு காணப்பட்டது. மேலும் ஒரு ஒழுங்கு முறையிலான தகவல்களை இரு பகுதியினரும் பகிர்ந்து கொள்வதுடன் சம்பவங்களுக்கு உடனுக்குடன் அணுகு முறையும் வைத்துக்கொள்ளவும் உடன்பாடு காணப்பட்டது.

எதிர்வரும் ஐப்பசிமாதம் 6ஆம் திகதி புதன்கிழமை அடுத்த சந்திப்புக்கும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டது. 22ஆம் திகதி மாசி மாதம் 2002 அன்று இரு தரப்பினருக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு குந்தகமில்லாமல் நடந்து கொள்வதையும் உறுப்படுத்துவது குறித்தும் இதில் இணக்கம் காணப்பட்டது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் அவர்கள், மார்சல் அவர்கள்(தலைமைச்செயலகம் மட்டக்களப்பு) பா.தயாமோகன் அவர்கள் (நிர்வாகசேவைப் பொறுப்பாளர் மட்டு அம்பாறை மாவட்டம்) த.குயிலின்பன்(அரசியல்துறைப் பொறுப்பாளர் அம்பாறை மாவட்டம்) பி.மனோஜ் அவர்கள் (மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைச்செயலகம்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறிலங்காப் படைத்தரப்பில் பிரிகேடியர்-விஜயகுணவர்த்தன (ஜெ.ஓ.சி.-22ஆவது படைப்பிரிவு) கேணல்-லக்சிறி அமரதுங்க (233 பிரிகேட் மட்டக்களப்பு) நிக்கெல பதில்கடமை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மட்டக்களப்பு, ஜமால்டீன் (பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு) ரத்நாயக்க (சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விசேட அதிரடிப்படை மட்டக்களப்பு) டீசில்வா (விசேட அதிரடிப்படை மட்டக்களப்பு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு சார்பில் மேஜர் ஜெனரல் டொன் புறூவ்ஹொவ்டே, ஸ்ரீன் ஜேகன்சன்- பதில் கடமைத்தலைவர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு, மட்டக்களப்பு ஜென்ஸ்வங் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மட்டக்களப்பு ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மின்னல்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி கனகபுரம் வீதியில் உள்ள சிறிய கோவில் ஒன்றிற்குள் மழைக்கு ஒதுங்கி நின்ற ஜெகதீஸ்வரன் சந்திரிகா (வயது 30) என்பவரும், குலசிங்கம் சங்கீதா (வயது 25) என்பவருமே பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கோவிலுக்கு அருகில் இருந்த மரம் ஒன்றில் மின்னல் தாக்கியதன் விளைவாகவே இருவருக்கும் சிறிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

(சோ,கு)

### விசர்நாய்...

தாகவும், அதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த வேளையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். (27)

### கைமாறிய கடிதம்

சி. கணேஸ்வரன்,சுடர் நிர்மாணிகள் கிளிநொச்சி என்ற விலாசத்துடன் அளவுச்சீட்டைகள் அடங்கிய கடிதஉறை உரியவரிடம் சேரவில்லை சேரன் உணவகத்திற்கு அருகாமையில் இம்மாதம் 8 ஆம் திகதி தவறவிடப்பட்டது.தயவு செய்து கண்டெடுத்தவர்கள் சுடர் நிர்மாணிகள் (உடைந்த நீர்டாங்கிக்குப்பின்னால்) கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தகவல் சி.கோணேஸ்வரன். (5123)

### நாகர்கோவில்...

ஆரம்பமான இந்நிகழ்வில் மேற்படி குண்டுவீச்சுச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுடைய உருவப்படங்களுக்கு அவர்களின் உறவுகள் கூடி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், போராளிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். (33)

### யுத்தத்தின்...

மனுவில் தனது பிள்ளைகள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போயுள்ளமையால் உயிர் வாழும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த மனுவை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் யுத்த சூழ்நிலையில் கைதாகிக் காணாமற் போனவர்களுக்குரிய பொறுப்பை அரசுதான் ஏற்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அரச சட்டவாதி காணாமற் போன சம்பவம் இடம் பெற்று 14 வருடங்களுக்கு மேல் கடந்து போனமையால் இதனை அடிப்படை மனித உரிமை மீறல் எனக் கூறமுடியாது. அப்படியான மனுக்களைத் தாக்கல் செய்வதானால் ஒரு மாத காலத்திற்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என வாதிட்டு இந்த மனுவை நிராகரிக்குமாறு கோரினார். இதற்குப் பதிலளித்த நீதியரசர் ராஜா பெர்னாண்டோ யுத்த சூழ்நிலையில் பல குறைபாடுகள் இருந்திருக்கலாம். ஆனால் அதற்காக இந்தக் குறிப்பிட்ட சம்பவங்கள் உண்மையல்ல எனக் கருத முடியாது எனக் கூறி அரச சட்டவாதியின் கோரிக்கையை நிராகரித்தார். அடிப்படை மனித உரிமை மீறல்கள் சட்ட பூர்வமாக இருந்தாலும் இராணுவத்தினால் கைதாகிக் காணாமற் போனவர்களுக்கான பொறுப்பை அரசாங்கம்தான் ஏற்க வேண்டும் என நீதிமன்றம் சுட்டிக்காட்டி பிரதிவாதிகளான திருகோணமலை பிளான்டன் பொயின்ட் இராணுவக் கட்டளை அதிகாரியை எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னதாக பதில் மனுத்தாக்கல் செய்ய அவகாசம் வழங்கி விசாரணையை ஒத்தி வைத்தார்

### தொடர்பு கொள்ளவும்

மரியா வீதி வட்டுக்கிழக்கைச் சேர்ந்தசிவசுப்பிரமணியம் ஜேசுதாசன் (சுபாஸ்) எங்கிருந்தாலும் உடனடியாக மு/மாங்குள மகாவித்தியாலய ஆசிரியர் கேசவன் அவர்களுடன்தொடர்பு கொள்ளவும்.

தே.அ.அ.இல.690411407V
கேசவன் மாஸ்ரர்,
மு/மாங்குளம் ம.வி.
(5117) மாங்குளம்.

### பதிவினை மேற்கொள்க

14-09-2004 ஈழநாதத்தில் பிரசுரமான தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் சந்திரோதயா விளையாட்டுக் கழகத்தினரால் உதைபந்து, கரப்பந்து போட்டிகள் 01-10-2004 தொடக்கம் நடாத்த இருப்பதால் மீண்டும் 25-09-2004இற்குள் பங்குபற்றவிரும்பும் கழகங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு சந்திரோதய விளையாட்டுக் கழகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (சி-10229)

### 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு 1922 - 03 - 22



உதிர்வு 2004 - 08 - 22

அமரர்

**திருமதி பிலிப்பு-றோசம்மா**

கோவில்குடியிருப்பு, முல்லைத்தீவு.

அன்புடன் எமைப் பெற்றெடுத்த அம்மாவே
ஆலயத்தின் இருப்பிடமே
அன்பாக பேணி வளர்த்த எம் தெய்வமே
ஆற்றாத துயரில் ஆழ்த்தி விட்டு எங்கே சென்றாயோ!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கோவில் குடியிருப்பு. முல்லைத்தீவு. (டி.௭௦௪) மகன் ராஜமணி மருமகள் நேசமணி

### துயர்பகிர்கின்றோம்

எமது வித்தியாலய முன்னைய நாள் முதல்வர்

**அருட்சகோதரி ஆமண்டீன் அந்தோனிப்பிள்ளை**

அவர்கள் தன் பணி முடித்து இறைபதம் அடைந்ததையிட்டு துயருறுவதோடு இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார். உறவினருடன் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/புனித பற்றிமா.றோ.க.வி.
(சி-10407)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.